ஒட்டியம்

சல்லியம்

தாமரை நூலகம்,
சென்னை - 600 026.

ஒட்டியம் சல்லியம்

(மாந்திரீக நூல்)

பதிப்பாசிரியர்

ஆர். சி. மோகன்

தொலை பேசி எண் - 23620249.

தாமரை நூலகம்

7, என். ஜி. ஓ. காலனி, 3வது தெரு,
வடபழனி, சென்னை - 600 026.

தாமரை வெளியீடு எண் : 98
முதல் பதிப்பு : ஜுலை - 1993.
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட் - 1996.
மூன்றாம் பதிப்பு : ஜனவரி - 2005
நான்காம் பதிப்பு : ஏப்ரல் - 2014
ஐந்தாம் பதிப்பு : ஜுன் 2019
உரிமைபெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர்	: ஒட்டியம் சல்லியம்
பதிப்பாசிரியர்	: ஆர். சி மோகன்
வெளியிட்டோர்	: தாமரை நூலகம் 7, N.G. O. காலனி 3வது தெரு வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	: ஜுன் 2019
உரிமை	: பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	: 21 செ. மீ. X 14 செ. மீ
அச்சுத்தாள்	: 16.கி. மேப்லித்தோ
எழுத்துக்கள்	: 11 புள்ளி
மொத்த பக்கங்கள்	: 81+7
பிரதிகள்	: 1000
நூல் விலை	: ரு. 40/-
அச்சிட்டோர்	: கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை - 34

91/41

பதிப்புரை

மாந்திரீகம் மெய்யா பொய்யா?

ஆராய்ச்சி செய்யத் தொடங்கினால் வெகு தூரத்திற்குச் செல்லவேண்டும்.

கடவுள் உண்டா இல்லையா? பேய் பிசாசுகள் உண்டா இல்லையா? ஆவிகள் என்பதென்ன? ஆன்மாவுக்கும் ஆவிக்கும் உள்ள தொடர்பு என்ன? மரணத்திற்குப் பின் மனிதர்க்கு ஒரு வாழ்வு உள்ளதா? என்பன போன்ற பல கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் நேரிடும்.

ஆராய்ச்சிக்கு - பரிசோதனைகளுக்கு உட்படுத்தக் கூடிய உலகியல் (பௌதிக) பொருள்கள் மட்டுமே உண்மையானவை. மற்றவை எல்லாம் பொய் என்று கூறி வந்த மேலை நாட்டு விஞ்ஞானிகளும்கூட இன்று மனிதனுடைய பூலோக வாழ்க்கைக்குப் பிறகும் ஏதோ ஒன்று இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

பூமியின் மேல் கண், காது, மூக்கு, வாய், தோல் முதலான ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட - ஐம்புலன்களால் கையாளப்படக்கூடிய நுட்பமான (அணு நோக்கி, தொலை நோக்கி, அதிர்வு நோக்கி (RADAR) போன்ற கருவிகளுக்கும் அப்பாற்பட்ட சக்திகள் இருக்கின்றன என்பதை மேல்நாட்டு விஞ்ஞானிகள் ஒப்புக் கொள்கின்றனர்.

ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட - ஆன்மா, ஆவிகள், பேய்கள், தேவதைகள், தெய்வம் வரை மனித அறிவால் உணரப்படமுடியும். அவற்றுடன் தொடர்பு கொள்ளவும், அவற்றை நம் விருப்பப்படி செயலாற்றவும் வைக்க முடியும் என்பவற்றை அறிவியல் பூர்வமாக, உணர்ந்து, செயல்படுத்தியும் நடைமுறையில் செய்து காட்டியும் வந்தனர் தமிழ்நாட்டுச் சித்தர்கள்.

சித்தர் நெறி பற்றி முறையாக ஆய்வு நடத்தினால் ஜோதிஷம் - மாந்திரீகம் முதலான அனைத்துமே அறிவியல் விஞ்ஞான பூர்வமானவை என்பதைத் தெளிவாக உணர முடியும்.

மூலிகைகளின் மருத்துவ குணங்களை உலகமே ஒப்புக் கொண்டுள்ளது. மேல்நாட்டு விஞ்ஞானிகள் அணு அணுவாகப் பிரிந்து அவற்றை ஆராய்ந்துள்ளனர். மேலும் ஆராய்ந்து வருகின்றனர். மாந்திரீக விஷயத்தில் நாம் அவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டிய உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறோம். இதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மற்றவர்களையும் புரிந்துகொள்ள வைக்கமுடியும்.

அறிவுக்கு எட்டாதது, அமானுஷ்யமானது என்று கருதப்படுகிற எல்லாம்

- அறிவு ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தக் கூடியவையே! வெறும் படிப்பினாலும் ஆய்வுக் கூடங்களில் பெறப்படும் பயிற்சியினாலும் மட்டுமே இத்திறன் பெற்றுவிட முடியாது என்பதை நாம் உணர வேண்டும். பிறர்க்கு உணர்த்தவும் வேண்டும்.

உலகியல் (பௌதிகப்) பொருள்களைத் தாண்டி, ஒரு அடி அப்பால் எடுத்து வைப்பதானால் கூட - மனிதன் உடற்பயிற்சிகளால் கட்டிய தசை வலுகொண்ட உடல் வலு பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல் - உளப்பயிற்சியினால் பல வகைகளிலும் உள்ளத்தைக் கட்டுப்படுத்தவும், உள்ளத்தின் எண்ணப்படி தன் ஆன்மாவை இயக்கவும் ஆற்றல் பெற்றவனாக வேண்டும்.

கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் உணர்வதைப் போல், உள்ளத்தால் உணர்ந்து கொள்வதோடு அதைப் பிறர்க்கு உணர்த்தவும் ஆற்றல் படைத்தவனாக வேண்டும்.

மாந்திரீக மூலிகைகள் பொய்யானவை அல்ல. அவற்றின் ஆற்றலும் பொய் அல்ல, பிறருக்கு வேண்டுமானாலும் அதைப் பகிரங்கமாக வெளிப்படுத்திக் காட்டமுடியும்.

தமிழனிடமிருந்து உலகம் கற்றுக் கொள்ள வேண்டியவை எவ்வளவோ உள்ளன. முதலில் தமிழன் தமிழ் மொழியிலுள்ள சித்தர்களின் நூல்களை முழுமையாகக் கற்றுத் தெரிந்து கொள்ளவேண்டும். அவற்றின் பயனை அறியவேண்டும். அடைய வேண்டும். பிறகு பிறர்க்குச் சொல்ல வேண்டும்.

சித்தர்களின் நூல்கள் கடல்போல் விரிந்து கிடக்கின்றன. பல இடங்களில் முடங்கிக் கிடக்கும் அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளோம். பழைய பிரதிகளாக அச்சடித்த நூல்களையும் ஓலைச் சுவடிகளையும் வைத்திருப்பவர்கள், தமிழின் பெருமை உலகம் அறியச் செய்வதற்காக அவற்றைக் கொடுத்து உதவ வேண்டும்.

கிடைக்கும் நூல்களை எல்லாம் பல்கலைக் கழகங்கள் வாங்கித் தொகுத்து அவற்றைப் பற்றி ஆய்வு நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். விஞ்ஞான பூர்வமான ஆய்வுகளைப் பல சோதனைக் கூடங்கள் மேற்கொள்ள வேண்டும். இத்துறையில் நாடும், அரசும், பணவசதி படைத்த பெரியோர்களும் செய்வதற்கு எவ்வளவோ உள்ளன.

இவை எல்லாம் நடைபெறும். தமிழகம் உலகிற்கே வழிகாட்டியாக விளங்கக்கூடிய ஒரு நாள் வரும் என்று உறுதியாக நினைக்கிறோம்.

எஸ். பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

ஒட்டியம்

சல்லியம்

உ

கணபதி துணை

ஒட்டிய முனிவர் அருளிச் செய்த

ஒட்டியம்

காப்பு

சீரணி கொன்றைசூடுஞ்
 செஞ்சடை யுடையான்பங்கில்
நாரணி கவுரிமுக்கண்
 நாயகி புவனம்பெற்ற
தாரணி யுமையாள்சோதி
 கருமங்கள் தானாய்நிற்கும்
பூரணி பெற்றயானை
 முகவனைப் போற்றிசெய்வாம். 1

நூல்

செய்யதோர் வசியமோகத்
 தம்பனந் தேசந்தன்னில்
வெய்யவுச் சாடனங்கள்
 மிகுந்தஏ டணையாங்கருணை
நொய்யபே தனங்கள்யாவும்
 மாரணக் கருமத்தோடும்
தய்யலிரொன்றுக் கொன்று
 சாற்றிய மந்திரங்கள். 2

மந்திர முன்னூலாய்ந்து
 வளங்கினா னொட்டியனென்போன்
தந்திரக் கருவுதன்னைச்
 சாற்றிய வெழுத்துஞ்செய்ய
பந்தமின் மனத்தினார்க்குப்
 பகர்ந்தனன் கருமத்தோடு
இந்தநூ லொட்டியமென்றி
 யாவரு மியம்பலாமே. 3

ஒட்டியம்

ஆனதோர் கருமமொன்றை
அய்ந்தவர் சொர்க்கஞ்சேர்வார்
ஆனதோர் கருமமொன்றை
அறிகிலார் நரகஞ்சேர்வார்
ஆனதோர் கருமமொன்றை
அறிந்தவ ரிந்திரனாவார்
ஆனதோர் கருமமொன்றை
அறிவது குருவைத்தானே. 4

தானெனு மகந்தைகெட்டு
சற்குரு வருளைப்போற்றி
போனதோர் கருமம்போக
புவியினிற் கருமமெல்லாம்
கானொடு மலையேயாறு
கடல்நிலங் கருதிப்பார்த்து
தேன்குரு மொழியாற்செய்ய
சித்திக்குந் திண்ணமென்றே. 5

சர்வ வசியம்

தேனாம்வெள்ளி ஞாயிறதில்
திங்கள்வியாழம் நெய்யாகும்
பானாம் செவ்வாய் புதனுக்குப்
பகருமுடன் பாலாகும்
ஆனால்ஆவின் புல்லுருவி
அதிலேகுழைத்துத் திலர்தமிட
வானோரெல்லாம் வசமாவார்
மண்ணில்சர்வ வசியமிதே. 6

இராஜ வசியம்

ஆனைவணங்கி நிலப்பனைவேர்
அருவெள்ளெருக்குத் தொட்டியுடன்
பூனைவணங்கி சுழலாவரை
பூந்தமுசுட்டை பொன்னோடு
தானைவணங்கிப் பொற்றலையான்
தன்னைவணங்கி சிவன்மூலி
சேனைத்தலைவன் முன்செல்ல
செய்யும்வசிய மிதுவாமே. 7

புருஷ வசியம்

சென்னாயுருவி செம்முள்ளி
 சிவந்தகஞ்சா செங்குவளை
பொன்னாங்காணி மதிமயங்கி
 போனார்தேடி வழிமரித்தான்
கன்னார்புனுகு நன்மஞ்சள்
 கருமையோடு இதுவெல்லாம்
சொன்னார்புருஷ வசியமென
 தொடுவார்திலதம் வெற்றியிலே. 8

ஸ்திரீ வசியம்

தாரந்துருசு செஞ்சாந்து
 சந்தனஞ்சவ்வாது கற்பூரம்
வாரமனையாள் முறைமசக்தி
 மதியைமசக்தி இவையெல்லாம்
ஓரோர்மருந்து இவையெல்லாம்
 உலகந்தன்னில் மாந்தருக்குப்
பாரும்பாரும் வசியமெனப்
 பகர்ந்தார்முன்னோர் பண்புடனே. 9

மிருக வசியம்

விஷ்ணுகிரந்தி மூலம்
 விஷங்கொல்லி காடுகட்டி
தொட்டியே மூலிமுத்தான்
 தொடுத்தநா யுருவிமின்னி
மட்டருஞ்சங்கம் வித்து
 மலையி லேரழிஞ்சியாவும்
சட்டமாய் மிருகந்தன்னைச்
 செய்யுமோர் வசியமென்பார். 10

சர்ப்ப வசியம்

பொற்கையாந் தும்பைமூலம்
 புகழ்நிலம் புரண்டிநீலி
நற்சிருக் கீரைகண்ணி
 நல்லநாயுருவி தொட்டான்
பொற்கொடி யாடையொட்டி
 புகன்றயிம் மருந்தையெல்லாம்

ஒட்டியம்

பற்பல கொத்தசர்ப்ப
வசியமென் றுரைக்கலாமே. 11

சத்துரு வசியம்

பொற்றலைக் கையான்வேரும்
புகழ்ந்தவெள் ளெருக்கின்வேரும்
முற்றின விஷ்ணுகாந்தி
மூன்றையு மொன்றாய்ச்சேர்த்து
பத்திநீமையே செய்வாய்
பகர்ந்தகாறாவி னெய்யில்
சித்தியாம் சத்துருவெல்லாம்
க்ஷணத்தினில் வணங்குவாரே. 12

லோக வசியம்

நின்றுசிணுங்கி செவ்வகத்தி
நீரின்சுழலும் ஆவரைவேர்
அன்றுமுல்லைக் கொழுந்தொட்டு
மானேகூத்தன் குதும்பையுடன்
கொன்றைப்பன்னீ ரிவையெல்லாம்
குறித்தார்லோக வசியமென
வொன்றுக்கொன்று வொன்றுசெய்யு
முறைக்குமந்திர மோர்விதமே. 13

வசியமெட்டுக்கும் தியானம் மூலமந்திரம்

ஓர்விதஓம் ஆம்ஜெயஜெயவென்
றுரைக்கச் சீக்கிரம்வாவா
பேர்பெற அவ்வும்உவ்வும்
பெருமுரு வசியவசிய
சீர்பெருசெங் கணபதியாய்
சித்திக்கும் சிவாகாவென்று
கூர்பெற நூற்றிஎட்டு
குறிக்குமஷ்ட வசியமாமே. 14

சர்வ மோகனம்

அரைக்காம்ப லல்லி
அதிமதுரம் கோஷ்டம்

ஒட்டிய முனிவர்

விரைத்தால் மேல்புல்லுருவி
வெண்குன்றிவித்து முலைப்பாலில்
அரைத்துத் திலதமிட
அறிவாய்ச் சர்வமோகனமாம்
உரைத்தேன்புவியில் யாவருக்கும்
உண்மையென்று உணர்வீரே. 15

இராச மோகனம்

ஆவினெய் தேனுஞ்சேர்த்து
ஆவின்புல் லுருவிகூட்டி
கோவிக ளில்லாப்பூசுக்
குளிர்ந்தகுங்குமமு நன்றாய்
தேவியைப் போற்றியாலின்
விரிக்ஷகப் பாலுங்கூட்டி
தாவிநீர் திலதஞ்செய்தால்
வேந்தர்தன் மோகமாமே. 16

புருஷ மோகனம்

செவ்வாமணக்கு செவ்வகத்தி
சென்னாயுருவி செம்முள்ளி
மவ்வார்காம ரூபியுடன்
மானைத்தேடித் தான்சென்றான்
கொவ்வைக்குழவி யிக்கருக்குள்
குறிப்பார்புருஷர் மோகனமே
வொவ்வோர்கருவு மந்திரமும்
ஓதியுணர்ந்தோ ருரைத்தாரே. 17

ஸ்திரீ மோகனம்

குங்கும மரலிவேர்
நீர்க்கொணலி மோகச்சாலை
மங்கிலி நீலிவிழி
மண்டுகம் கோடகசாலை
செங்குன்றி இவைகளொக்கச்
சேர்ந்திடும் கருக்களெல்லாம்.
மங்கையர் மோகனம்கொள்வார்
மந்திர மறிந்தபேர்க்கே. 18

மிருக மோகனம்

வெண்குன்றி முத்தக்காசு
விளங்கிய கழற்சிக்கூட
நன்னெறி வேதஞ்சொல்லும்
நரித்தலை யோடுங்கூட்டி
கன்னியர் முலைப்பாலாலே
கடுகவே யரைத்துக்கொண்டு
மின்னிய மோகஞ்செய்ய
மிருக மோகனமுமாமே. 19

சொர்ண மோகனம்

குருவருள் மருதன்வேரும்
குளுந்தவெண் மத்தன்வேரும்
மருவுநன் னாரிவேரும்
வகைமருள் மத்தன்வேரும்
பருவுவெண் மத்தன்சாத்தில்
பரிவுட னரைத்துருட்டி
திருவருள் சொர்னமோகஞ்
செய்திடும் வகைகளாமே. 20

சத்துரு மோகனம்

சென்னாயுருவி வெண்குன்றி
சீதாதேவி செங்கழுநீர்
சொன்னார்துடரி சிறுபுன்னை
தொகுப்பாயஞ்சு வேர்களையும்
மன்னார்கோடக சாலையிலே
வகைசேர்சாத்தி லரைத்துருட்டி
என்னால்சத்துரு மோகனமாம்
இயல்பாய்த்திலத முறைத்தாரே. 21

லோக மோகனம்

முல்லைவெண் கொழிஞ்சிகாயம்
மூவிலைக் குருந்தநொச்சி
வில்லமோ ரானகையான்
விரலிவேர் கொம்பில்சோம்பு

ஒட்டிய முனிவர்

குல்லைநன் னாரிதன்னைக்
குறித்திட்டுத் திலதமிட்டால்
வல்லதோர் லோகமெல்லாம்
வணங்குவார் வசியமாமே. 22

மோகன மெட்டுக்கு மந்திரம்

சீர்பெரும் ஆரேஆரே
சிறந்த அரிஹரிஅரிஹரி
பார்பெரும் மோகாய்மோகாய்
பரம மோகினியாள்
தார்பெரும் யிரிசிப்பரியே
தன்மையா மாங்ஊங்
வார்பெரும் லலல
வகையுட நூற்றெட்டோதே. 23

தம்பனம்

கருங்குன்றி சூலிகாரி
கடவுளக் கருத்தகஞ்சா
புரங்கொல்லி நாவடக்கிப்
போய்வழி மறித்துத்கொண்டான்
நெருங்கிய சுவரிலாடை
நிலத்தம்மி வகைகளெல்லாம்
ஒருங்குடன் செய்யவேண்டி
உரைத்தார் சர்வதம்பனமே. 24

சுக்கில தம்பனம்

விஷ்ணு கிரந்திமூலம்
விளாம்பிசின் சிவந்தகஞ்சா
மட்டவிழ் மத்தங்கஞ்சா
மருளூமத் தன்வித்தும்
முட்டவே சாதியாறும்
முயன்றுநீ திலதந்நீட்ட
திட்டமாம் சுக்லதம்பம்
ஜெயமெனச் செப்பலாமே. 25

ஆயுதத் தம்பனம்

சூரிவேர் துடையிற்சீலை
சுத்தும்பொன் முசுட்டைவேரும்

ஒட்டியம்

காரியி னிணமேபச்சை
  கதலிவேர் பேயன்தண்டும்
தூரிகை பச்சைப்பாம்பு
  சூத்திர மூலிரெண்டும்
ஓரொரு மருந்து தானே
  உலகவாயுதத் தம்பனமே. 26

மிருகத் தம்பனம்

உருமலம் பச்சையோந்தி
  யுணரிதன் மூலங்கன்னி
இருள்வலி மூலிவேரும்
  இருவரி லொருவன்வேரும்
பெரிய நன்னாரிகாடன்
  பேய்ப்பீர்க்குச் செரியும்பாலை
தெரியுமா மிருகதம்பன
  மென்னவே செப்பலாமே. 27

ஜல தம்பனம்

நீர்மேல் நெருப்புவன்னிகட்டு
  நின்றுசிணுங்கி நிலம்புரண்டி
பார்மேல்ச்செத்தான் வழியாளி
  பாசங்கத்தி கடலடைத்தான்
சூரைகொன் றானிருபிரம்பு
  சுனத்திவளத்தி முடக்கொத்தான்
சேருமிதுவே ஜலதம்பனம்
  ஜெகத்தில்சொன்னே னறிவீரே. 28

அக்கினி தம்பனம்

சங்கன்வேர் குமரிவேரும்
  தாமரைக் கிழங்குமேனி
பொங்கிய வெள்ளைக்காக்கன்
  புகழுஞ்செவ் வகத்திசுண்டை.
செங்கொடி வட்டத்துத்தி
  திரளுமோ ரிதளின்தாமரை
மங்கையர் வேலிகூனி
  வகையொன்று அக்கினிதம்பனமுமாமே. 29

தேவ தம்பனம்

கொத்தானகொளிஞ்சி நிலவாகை
    கொள்வாயாவின் பாலதிலே
நித்தார் ஆவின்வேர்
    நிலைக்குஞ்ஜீவ நிச்சாரதிலே
உத்தேயறிந்தா ரொட்டியனு
    முலகி லுத்தாருண்மையென்ப
பெத்தார் தேவதம்பமிது
    பிரித்தே வகையுமறிவாயே. 30

சர்ப்ப தம்பனம்

சிறியா நங்கையாவட்டி
    சின்னுயிரண்டு முகமினுக்கி
அறிவார் நாகவல்லியுடன்
    ஆத்திவேர்செவ்வா மணக்குடனும்
நெறியில் நீணஞ்செவரொட்டி
    நிலையிற்பிரியான் கருங்குன்றி
குறியாயிதுவே சர்ப்பதம்பனம்
    கூறுமந்திரம் விதிப்படியே. 31

தம்பன மெட்டுக்கு மந்திரம்

விதிப்படியே நிங்வங்சிங்
    லங்மங் கென்று
வீரியமாய் மங்லங் வங்
    லங் யங் கென்று
பதிப்படியே லங்கொன்றும்
    கம்பாயதம்பாய வென்றும்
பகருவாய் அரே அரே நிற்சிய
    நிரசிய நீலகண்டரூபி
மிதிப்படியே சரம்ரூபி
    ஆதியா னந்தியாத்தாள்
அன்புடனே தம்பன
    பாரா யணியேயென்றும்
கெதிப்படியே ஐயுங்கிலியுஞ்
    சுவாகா வென்று

ஒட்டியம்

கெணிதமுடன் ஜெபிக்க
லட்சம் சித்தியாமே. 32

சருவ உச்சாடனம்

தடையத்தான் பாம்புகண்ணி
சாத்திரபேதி கொட்ட
மிடையினில் நடனசூரி
யிருவரை யோட்டிவைத்தான்
நடையினிற் புளுதிகவ்வி
நாய்மயிர் கழுதைவிட்டை
விடையமிது சர்வமாம்
விளம்புமுச் சாடனங்கள். 33

மிருக உச்சாடனம்

வருமேகரியை மிரட்டியுடன்
வகைசேரிருவர் தனைமிரட்டி
யுருமேதிருமயதின் விட்டை
உலகில் புலையர்சுடுநீறு
தருமேசீதா செங்கழுநீர்
தானேமிருக மோடுமென
சருவமிருக வுச்சாடனத்தை
தானேயறிந்து வுரைத்தாரே. 34

சத்துரு உச்சாடனம்

மானாம்செவியின் கள்ளியின்வேர்
மதியைமயக்கி யரமுடித்தான்
தானாங்காக்கை யதின்கூடு
தனித்தவேம்பின் பிணநீறு
மானார் தூரச் சீலையுடன் வகையா
யொவ்வொன் றொட்டிவைக்கும்
தானாஞ்சத்துரு வுச்சாடனத்தை
தரணியோற்கிது வுரைத்தாரே. 35

தேவ உச்சாடனம்

அரமுறி குமறன்விட்டை
அவனியில் கழுதையாயும்

ஒட்டிய முனிவர்

திரமுள்ள மங்கைதூரச்
சீலையுந் துருசுங்கூட்டி
பரமனா ரணிந்தநீரும்
பதியிலை தொட்டிவைக்கும்
திரமுள்ள கெணங்கள்பூத
தேவஉச் சாடனமாமே. 36

விஷ உச்சாடனம்

நீலிவேர் அனலின்வேரும்
நின்றமா விலிங்கன்வேரும்
ஆலின்மேல் பள்ளிகொண்டோன்
நவநிரப் பாம்பினூணும்
மாவிநேர் வாளங்கூட்டி
மந்திர முறைக்கலாகும்
தாவிநீர் லங்கமங்கென்றால்
தனிவிஷ வுச்சாடனங்களாமே. 37

ஸ்திரீ உச்சாடனம்

பூனைவணங்கி கௌதும்பை
புகழுமோந்தி முதுகெலும்பு
தானே தாயைக் கொன்றானும்
தயங்குந்தேளின் கொடுக்குடனே
மானார்தூரச் சீலையுடன்
மதியைக்கெடுத்தா னிவையொக்க
கானேலோட்டு மாதர்களைக்
கலைக்குமுச்சாடன மிதுவே. 38

சர்வவியாதி உச்சாடனம்

நாறுகறந்தை திரிகடுகு
நவமாம்சித்திர மூலமுடன்
சேருமுலகில் மதிமூலி
ஜெகத்தில்மிளகு குளவிந்தம்
கூறுமிளகா யிவையெல்லாம்
உமையேயெட்டு வியாதிகளை
ஆரும்வியாதி யுச்சாடனம்
அறிவாய்மந்திர மியலாமே. 39

ஒட்டியம்

உச்சாடன மெட்டுக்கு மந்திரம்

இயலாத ஆம்ஓம் குரோங்
  குச்சாடு அரங்அரங்
இன்பமுள்ளராரா சீக்கிரசீக்கிர
  உச்சாடாய வென்றும்
ஒயிலாக ஆதிவைரவி
  யிகமுருங் தூளிதூளி
உன்னிதமாய் தூக்குதூக்கு
  அருணிஅருணி ஆங்காராட்சி
மயிலாக அகோரரூபி
  சுவாகா வென்று.
மாட்டடா ஆயிரத்
  தெட்டுத்தான் மைந்தா
முயலாக உச்சாடன
  மெட்டுஞ் சித்தி
முனிவனுரை பொய்யாது
  சத்தியமாய்ப் பாரே. 40

பில்லிவஞ்சனை சூனியங்கள் முதலானதுக்கும் சிலகை மந்திரம்

அந்தணன் கொன்றை
  அவனிசெங்கள நிக்கொட்டம்
முந்தவெண் குன்றிமாட
  முனங்கிள புறாவினெச்சம்
விந்துதன் னகமும்பொன்னாம்
  முயன்றரை பழச்சாற்றாலே
சந்தியில் மந்திரங்கள் சொல்லு
  சாருமுன்சிலகை தானே. 41

சிலகை மந்திரம் ஆனந்தக்களிப்பு

தன்னம்தன தனனாம் தந்தம்
  தனனத்தனன்ன தனதனதனனாம்

சந்தம்

ஓம்பரிசினை சாபனை அந்தத்
  தெகுதெகு சிங்ரங்சித்திரரூபி

ஒட்டிய முனிவர்

சிஷ்டபரிபாலன மாம்அத்துடன்
  ஙங்ரங்வாங்குவாங்கு உருளுருளு
சோரதகனியுடன் அங்கே
  சொல்லுஞ்சித்ரக்கனி சூட்சமதாய்
ரரிட்டாஓடுவோடு நயமான
  உங்உங் எங்எங்கும்
ஐயும்சுவாகா வென்று
  ஆயிரத்தெட்டு ரூபாயமதாய்
சாயாமல் மாட்டிடுவாய்
  சத்தியம் தப்பாதுசித்தியதாம். 42

(தனனம் தனதனனா)

லேபனம்

செங்குன்றி வித்தும்
  சிவந்தநீர் முள்ளிவித்தும்
மங்கரிதாரம் கொட்டம்
  ஆயிளைமுலைப்பால் சேர்த்து
சங்கரன் றலையிற்பித்தந்
  தையலைப் புணர்வீராகில்
அங்கவள் தாயும்தானும்
  அடிமையாவதுந் தானெண்ணே. 43

ஸ்திரி லேபனம்

தங்கமா வரைவசம்பு
  சாத்துவேன் விஷ்ணுகாந்தி
இங்கிதை வேதநல்
  லெண்ணையிற் சேர்த்துக்கொண்டு
மங்கை யோனியிலேபூசி
  மருவிடிற் பிரியாளென்றாள்
வங்கண லேபனத்து
  மந்திரஞ் சாத்துவேனே. 44

லேபனம் இரண்டுக்கும் மந்திரம்

அரியோம் லம்லம் சர்வர்ணங்கு மாதங்கி சிங்ஐ
மோகிமோகி ஔவும் ஸ்ரீயும் நம நம.

ஏடணை

கொற்றான் கொழுஞ்சி வண்ணை புன்னை
கூட்டுவெள்ளை யாமணக்கு
செத்தார்மூலி கருங்கண்ணி
செம்பூத்தெச்சம் புறாவிறகு
நற்றாமரைநூல் தான்கொண்டு
நாயுண் கொண்டான் ஜாதிலிங்கம்
மத்தாரசர்வ ஏடணையாம்
மடியாயரியு மங்கையரே. 45

இராச ஏடணை

காகிலைக் கருத்தமூலி
கருங்குன்றி புனத்தின்கம்பு
நாகனா நூறுலிங்கம்
நல்லரி தாரங்கொட்டம்
சேர்க்கவே யிவைகடன்னை
சேர்த்துமே மயானந்தன்னில்
மூர்க்கமா மேடணைராஜ
முன்னோர்கள் மொழிந்தவாறே. 46

புருஷ ஏடணை

திருகுகள்ளி வெள்ளைக்காக்கன்
செம்முள்ளி செங்கொழிஞ்சி
மருவுநீ தகரையாரை
வழங்கிய கோஷ்டம் சுக்கிலம்
குருவருள் தன்னால்கண்டு
குவலயந் தன்னில்செய்ய
புருஷ ஏடணையாமிந்த
புலமிது அறிவதாமே. 47

ஸ்திரீ ஏடணை

சிவந்திடுஞ் சித்திரமூலி
செங்கல்லிலா மணக்கு
கலஞ்சிடு நீறுகோஷ்டம்
காயினைக் கொன்றானாயூண்

ஒட்டிய முனிவர்

தவந்தமண் திண்ணிப்பாம்புத்
    தானுமேயி வைகளொக்க
தவஞ்செயு மாதற்கேனும்
    அறியு மேடணையுமாமே. 48

பாட பேதம் செவ்வல்லி யாமணக்கு
தாயினைக் கொண்றான் நாயூண்

மிருக ஏடணை

கருவெனும் பூனைக்காலி
    காட்டினிற் செங்கத்தாரி
அறுகின்வேர் முத்தக்காசு
    அவனியை முறித்தசல்லி
இருவகை யொட்டிதொட்டி
    மிவ்வகை ளாயூண்கூட
மிருகஏ டணையீதென்று
    விளம்பினார் முன்னோர்தானே. 49

தேவ ஏடணை

கருங்காக்கன் திருகுகள்ளி
    காட்டினில் செங்கத்தாரி
மருங்குவெண் காக்கன்மேனி
    வழிதனை மறித்துக்கொண்டான்
சுருங்கிடுந் தொட்டார்ப்பன்றி
    சோரிநாரை ரத்தம்
திருங்கொடி பிசாசுதேவர்
    ஏடணை செய்யலாமே. 50

லோக ஏடணை

சீவனி வடக்குவேரும்
    செயமுரித் தானகள்ளி
காவனிச் சடங்குகொத்தான்
    கலைந்திடுந் தும்பையோடு
கோவினில் மரவுபையும்
    குறைந்திடும் பன்றிநெய்யும்
மாவினி லோகந்தன்னை
    வகையுமே டணையுமாமே. 51

சர்வபூத ஏடணை

காட்டினில் கிலுகிலுப்பை
    கலைந்திடும் ஆடுதீண்டான்
நாட்டினில் கீழ்க்காய்நெல்லி
    நாசிருக் கீரைக்கையான்
ஆட்டிடு வெட்டையுண்டான்
    அவன்தலை யோடும்பல்லும்
பூட்டிடும் பூமிபூத
    ஏடணை புகலுமந்திரம். 52

சர்வபூத ஏடணை மந்திரம்

மந்திரஓம் காட்டேரிசாமுண்டி ஆத்தாள்
    மகத்தான காமரூபி அங்கெங்கென்று
தந்திரமாம் நாரியென்று எந்துஎந்து
    தகையான எகையாளகையா அவடேஅவடேயென்று
எந்திரமாம் அரரரர அம்மையென்று
    ஏகமாம் சிங்சிங்சிங் வங் வங்கென்று
உந்திரத்தால் லருவஏடணை சுவாகாவென்று
    உருலட்சம் ஜெபிக்கவொரு நொடியிற்சித்தே. 53

சர்வபூத ஆக்ஷணம்

கன்னிபா தரியேமுல்லைக்
    காக்கணங் கோழிப்பித்து
சென்னிது காக்கணங்குருவி
    சிவந்ததோர் செம்பைவித்தும்
சொன்னவன் பேசானுப்பு
    சுண்டைவேர் நிலத்திநாகம்
இன்னிவைசருவ ஆக்ருஷணம்
    என்றிவை யியம்பலாமே. 54

இராஜ ஆக்ருஷணம்

தலையது சுருளிமுள்ளி
    சத்திச்சா ரணையினோடும்
நிலையுற்ற ஆந்தைக்கண்ணும்
    நீரின்மேல் நெருப்புங்கூட்டி

யிலையது செம்பூலாவை
இவைகளு மொன்றாய்தானே
மலைமுத லிதற்குராஜ
மன்னர்ஆக் ருஷணமாமே. 55

புருஷ ஆக்ருஷணம்

சிறுபுன்னை விஷ்ணுகாந்தி
சீருவேரில்லாக் கொத்தான்
குருந்தொட்டி வசம்புசுண்டை
குளவிந்தங் காக்கைநீரும்
மருவிலா விச்சுவெட்டி
வகைவகைஒன்றொன் றேதான்
றிருந்தவேர் புருடன்றன்னை
செய்யுமாக் ருஷ்ணமாமே. 56

ஸ்திரீ ஆக்ருஷணம்

உள்ளொட்டி புன்னைகொன்றை
உறைமொழி பேசானுப்பு
கள்ளவா லருணைவாலும்
கலைந்திடும் புறாவினெச்சம்
ஒள்ளிய நாகசட்டை
உடந்தையாய் ஒன்றாய்க்கூடில்
துள்ளியே வருவார்மாதர்
சூட்சஆக் ருஷ்ணமாமே. 57

மிருக ஆக்ருஷணம்

நன்னாரி துடமேனி
நற்சிறுக் கீரைக்கொன்றை
பொன்னினா வரையுமண்டம்
புகழுங் கஸ்தூரிமஞ்சள்
உன்னிவை புறாவினெச்சம்
இயல்புடன் ஒன்றாய்க்கூடில்
துன்னிய மிருகமெல்லாம்
துடருமாக் ருஷணமாமே. 58

தெய்வ ஆக்ருஷணம்

பூனைவணங்கி சுரபுன்னை
புகழும்முலையின் அமுர்தத்தில்

ஒட்டியம்

வானேசுனத்திப் பதியேரி
    வலியஅழைக்கும் பொற்கொன்றை
தேனேபுணர்ந்தசிவன் வேம்பு
    சென்னாயுருவி மருள்மத்தன்
கானில்தேடி மயங்காதே
    காண்பாய்தேவ ஆக்ருஷணமென்றே. 59

லோக ஆக்ருஷணம்

தொட்டால்வாடி வெள்ளெறுக்கு
    தொவிவாகஸப் பைப்பால்குரண்டி
கெட்டார் பெருந்தசிறு புன்னை
    கேளுமைங்கோலம் புறாவிறகு
வட்டமுலையாள் தான்சேர்க்க
    மயங்கும்லோக ஆக்ருஷணம்
திட்டமிதுவேவகை வேரு
    திரமா மந்திரமாந்திரந்தான்வேரீம். 60

ஆக்ருஷண மெட்டுக்கு மந்திரம்

வேரானமாகாளி வைரவிமுக்கண்ணி
    விதமான ஆக்ருஷண தூளியானந்தவல்லி
மாரானநீலி பகவதி ஜெயஜெயாவென்று
    மாட்டாடா வெசயவெசயா ஆக்ருஷணாயாவென்றும்
பாராய்நீ ரங்குங் கிலுங் லிங்கென்று
    பகருகிறேன் கிமடிகிருடியீம் வீம் லா லா
சூரான லங் நங் பரா பரா ரரரா வென்றும்
    சூறுவாய் நூற்றெட்டுசுசீ சுசீ சுவாஹா வென்றே. 61

சர்வ பேதனம்

கொட்டான்முட்டை பழிபண்ணி
    கூடுமிருவர் மடிக்குருவி
விட்டாலே செம்பருந்தி
    வெள்ளை கொழுஞ்சி செவ்வரலி
தட்டான்கன்னி நெடுவாலன்
    தலையில்லாடி இவைகளெல்லாம்
இட்டார்கிட்டார் முறியெனமே
    என்றுசர்வ பேதனமே. 62

இராஜ பேதனம்

கோழியாவரை சீவனிலே
குடியான்காக்கை வீடதையும்
தேளின்முதுகின் முள்ளெலும்பு
சீந்திதும்பை யுலிமுட்டை
ஊழியத்தான் காஞ்சுரையும்
உடனேநாச்செவி யோந்தியுடன்
நாழியுலகி லரசருக்கு
அறிவாய் பேதனமிதுவாமே. 63

பாடபேதம் : சீந்தில் தும்பை பல்லி முட்டை -

புருஷ பேதனம்

கச்சான்பாளை கெளதும்பை
கண்டுஇரவிற் பிடுங்கிவந்து
பச்சைமுலைத் தான்கருவுழித்தான்
பகைத்தோருண்ணும் வாய்பருக்கை
நச்சுப்பல்லி பெருந்தும்பை
நாட்டையலைத் தானிவையொக்க
அச்சமலைத்து அசைத்தொட்டும்
அறிவாய்புருஷர் பேதனமே. 64

ஸ்திரீ பேதனம்

சீதாதேவி செங்கழுநீர்
ஜெகத்தில்தாயைக் கொன்றானும்
ஓதமடையன் குடியனைத்தான்
உலகில்க்காந்தல் பெருந்தும்பை
காதார்கொள்ள கலையுலைத்தான்
காக்கைக்கூடுங் கருந்தண்டும்
மாதர்மனத்தை முறித்தோட்டும்
வகைசேர் பேதனமிதுவாமே. 65

மிருக பேதனம்

இசங்குஞ்சீவன் கருங்குன்றி
எட்டிமுசுட்டை கழுகொம்பு
மசங்குங்கூகைக் கருங்காக்கை
மண்டையுடனே முசுருமுட்டை

ஒட்டியம்

விஷங்கள்வளத்தி பதியலைத்தான்
விட்டுஆட்டி யிவையெல்லாம்
கசங்கமிகவே கலைத்தோட்டும்
காட்டினில் மிருகபேதனமே. 66

தேவ பேதனம்

கழுதைக்குளம்பு மதின்சடையும்
கானல்மாருங் கழுதைவிட்டை
உழுவாம்பாதரி மாவிலங்கு
உலகில்பூதம் தனையடைத்தான்
தழுவாரான கச்சா க்குருவி
சாத்துஞ்சீவனி வித்துமுதல்
விழுமேயலைந்து பதிவிட்டு
மிரட்டுந்தெய்வ பேதனமே. 67

அக்கினி பேதனம்

உத்தமத்தாளி செவ்வகத்தி
உலகிலாலங் கொழுந்துசுண்டை
நத்தமரைக்கிழங்கு துத்தி
நங்கிலி குமரிபச் சோந்தி
கொத்தான்வித்து மேனிசங்கு
குணமாமோரிதழ் தாமரையும்
சித்தாமிவைக ளொவ்வொன்றும்
திரமாக்கினி பேதனமே. 68

லோக பேதனம்

நச்செலி நச்சுப்பல்லி
நல்வேம்பின் காக்கைக்கூடும்
பச்சோந்தி யிந்திரகோபம்
பழிபண்ணும் சுண்டை தும்பை
மெச்சவா வரையிற்பூச்சி
மமலையாள் தீட்டுச்சீலை
மிச்சமிவ் வகைக்குமந்திரம்
விளங்கிய லோகபேதனமே. 69

பேதன மெட்டுக்கு மந்திரம்

பேதனமாம் அரகர சிவா நமாதிரிபுர தகனிதேவி
பின்புரைக்கும் காரணி செந்தாமரையே யாத்தாள்

ஒட்டிய முனிவர்

பேதனமாம் ஏரிட்ட பார்வை யாளே
பேதகியே நீலிமுக் கண்ணி பாங்டாங்
பேதனமாம்டுங்டுங் சாருபி சக்ருபிஆயி
பிரத்தியங்கிரே ஜெயஜெய பேதையா பேதையா
பேதனமாம் சிங் சிங் யங் யங் லங்லங் கென்று
பிசகாமல் மங்மங் யாயாசுலாஹா வென்னே. 70

சர்வ மாரணம்

செந்தும்பை சிவந்தபூச்சி
திருத்திய ஏழுமுள்ளு
முந்தியமுக்கன் காக்கை
முட்டைவேர் குத்தான்மத்தான்
சந்தியில்நின்று கொண்டான்
தலைவித்தா னாடுவெட்டி
யிந்தவனுக்க ளொவ்வொன்றும்
யியல்சேர்மாரண மிதுவாமே. 71

அரசர் மாரணம்

அரசுபுரசு அருணியொடு
அன்பாய்வகைக ளஞ்சாகும்
திரமாய்க்கொங்கன் முளையுடனே
செப்பாய்சாத்தியன் குலமறிந்தே
மரமேயஞ்சி ஓரிதளும்
அவனியில்மாண்டோன் பல்மண்டை
மரவான்பெற்றோன் முதல்கையில்
மாராய்வேந்தன் மாரணம். 72

சத்துரு மாரணம்

நஞ்சுபுங்கு ஐங்காயம்
நலமாய்காகத் தெனிம்புதலை
வஞ்சங்குலமும் வலுவறிந்து
மதிசேர்கன்னி விரகருக்கு
மிஞ்சாக்கொழுஞ் சிவிவைகளெல்லா
விஷமும்கொங்கன் முனையுடனே
வஞ்சர்பகையர் தனையருக்கும்
வகைசேர்சத்துரு மாரணமே. 73

பாடபேதம் : நலமாய்க் காகத் தெலுபிடி தலை

சர்வபூத பிசாசு மாரணம்

நச்சுப்பல்லிநாவிற் பசை
நலமாம் கழுதைக்குளம் புடன்வீழி
கச்சக்கடுகுமுருங்கை வித்துக்
கழுதைச் சடையும்பன்றி விட்டை
வச்சுப்பாரார் கருநபி
வழங்குகள்ளி ஐங்காரம்
யெச்சுசர்வ பசாசுமுதல்
வியல்சேர்பூத மாரணமே. 74

சர்வஜீவஜெந்து மாரணம்

கொல்லுமூலி கும்மட்டி
குழந்தைப்பித்தும் நகந்தந்தம்
கல்லுநெருக்கிக் கடுகொட்டி
கண்டால்மயக்கிக் கருநாபி -
சொல்லுமயக்கிப் பிணமயக்கி
கருகாய்வகைக ளொவ்வொன்றும்
மல்லுச்சர்வ ஜீவஜெந்து
மாரணமிந்த வகையாமே. 75

சர்வவிஷ மாரணம்

பூனைவணங்கி நீலிகள்ளி
புகள்நேர்வாளம் புலால்நாரி
மானைத்துரத்தி மாவிலிங்கு
வளருமழிஞ்சி காஞ்சுரையும்
கானைத்தோட்டி கருநொச்சி
கார்த்திகைசித்தர மூலியுடன்
யேனைக்கால் கடிவிஷநீங்கும்
யியல்பாம்சர்வ மாரணமே. 76

சர்வதேவ மாரணம்

காரெள்ளெண்ணை தலைமண்டை
கண்பால்காக்கை புறாவினெச்சம்
தாரன்மயிரில் மாணிக்கம்
சபையைமருட்டி தேவாங்கு
ஆரனனோந்தி அரிதார
மணிந்துகொண்டு இவையெல்லாம்

ஒட்டிய முனிவர்

நேரேதிலதங் கண்பாரில்
சர்வதேவ மாரணமே. 77

சர்வரிஷி மாரணம்

கொத்தான்வித்து ஐங்கோலம்
கூட்டின்புறாவின் பித்துஎச்சம்
வித்தாயெட்டி கருக்குருவி
தெள்ளிமருட்டி பகல்மருட்டி
பித்தான்குழந்தை காக்கைரத்தம்
பிலக்குமிவைகள் திலதமிடில்
சத்தரிஷிகள் தேவருக்குந்
தெரியாமாரண மிதுவாமே. 78

மாரண மெட்டுக்கும் மந்திரம்

கோளப்பாமாரி பகவதியே யம்மாள்
கெடியானதிரிசூலிடாகினி டாகினியேயென்று
ஆளப்பாசாடுசாடு அய்யா அய்யா
அன்பாகவாசர்வ மாரணியேயாயி
பாளப்பாபோகாமல் சீபோதேவிஎன்று
பண்புடனே நூற்றெட்டுச் சொல்லிவிட்டால்
வாளப்பாகொண்டருக்கும் என்னசொல்வேன்
வகையறியனொருபோதுங் காணமாட்டான். 79

பாதாள அஞ்சனம்

மஞ்சளுஞ் சாதிக்காயும்
வனவித்துத் தண்ணீர்தேற்றி
மிஞ்சியதும்பை கையான்
விளங்கிய பகவின்கண்ணும்
வஞ்சித்தா ராமணக்கு
எண்ணையில் மையேசேர்த்து
அஞ்சனம் பாருமிந்த
அவனியில் பாதாளந்தோன்றும். 80

பூத அஞ்சனம்

கண்ணீர்தேற்றி கௌதும்பை
தானாங்குப்பைக் கீரைவித்து

ஒட்டியம்

கண்ணீர்பச்சை குளவிந்தம்
காக்கைக்கண்ணு மிவையெல்லாம்
வெந்நீர்வேரு சிருதிலதம்
விதமாய்ப் பார்க்கவெவ்வேறு
கண்ணிற்றோற்றும் பூதகணம்
காண்பாய்அஞ்சன மிதுவாமே. 81

துலைதூர அஞ்சனம்

ஈசலிறகு சிறுக்கீரை
யியல்சேர்தீண்டாப் பாளையுடன்
வேசக்காக்காம் நெஞ்சுபித்தும்
விடமாங்குரங்கின் பஞ்சுமண்டை
வாசம்புகழ்சேற் றட்டிநெய்யில்
வகையாய்க்குழப்பிப் போத்திமையில்
தேசத்துலையுந் தூரமெல்லாம்
திரக்குமஞ்சன மிதுவாமே. 82

நீரஞ்சனம்

கோசமும்பச்சை யோந்திக்
கூட்டிடும் பித்துங்கண்ணும்
மாசமாங்கீழ் காய்நெல்லி
வாழ்நரியொட்டி கையான்
மாசமாந்தேனுங் கூட்டிப்
பார்த்திடில் சாகரங்கள்
நேசமா நீரில்பார்க்க
நிலைக்கு மஞ்சனங்களாமே. 83

குறிமை அஞ்சனம்

கூகைக்கண் பித்திரட்சி
கூட்டுதக்காளி பின்னை
வாகையின் வேருங்கையான்
வன்புதக் காட்டின்வேரும்
நாகனை அழைத்தான் வேரும்
நலங்கவும் தும்பைதானும்
கோகன வுலகிலுள்ள
குறிமையஞ்ச னங்களாமே. 84

சகல அஞ்சனம்

பூனைவணங்கி கிலுகிலுப்பை
புகளோரிலையும் கீழ்காயும்
மானைக்கட்டி ஆடுதின்னான்
வகைசேர்நீலி மெய்தும்பை
ஏனைக்கழுகுநீர் விலக்கி
யியல்சேர்துங்கன் கௌதும்பை
மானேசர்வ அஞ்சனமா
மரைக்கவில்லை யினிப்பாரே. 85

பரவை அஞ்சனம்

பாரேபரவை யஞ்சனத்தை
பழுக்கும்பலாவின் கொட்டையுடன்
நேரேபூமி யமிர்தமதில்
நிளையான்புத்துத் தேனுடனும்
வாகேயரைத் துமைபத்தி
வளமாய்நெற்றி தன்னிலிட
தேரேபரவை யஞ்சணமாந்
தெளிந்துசொன்னே னறிவீரே. 86

பொதுவியல் அஞ்சனம்

அறிவிர்காகக் கல்லதனை
அருளுஞ்சித்தர் பொதுவியல்பாம்
தருவீர் அஞ்சாந் தலைப்பிண்டம்
தக்கஇருளன் மூலியுடன்
மறிவீர் அறிவிர் கலைதனிலே
மையையெடுத்துத் திலதமிட
தெறிவீர்சர்வ அஞ்சனமும்
தேனேமந்திரம் செப்புகிறேன். 87

இதற்கு மந்திரம்

பாரப்பாசொல்லுகிறேன் ஓம் அஞ்சனி தேவியென்று
பகருவாய்சர்வ பேதனியேரூபி
காரப்பாயிளவானி வாய்வுதேவி
கனமானபூதாளிசர்வ அஞ்சனியேஎன்றும்

ஒட்டியம்

நேரப்பாபிரவஞ்சணி எட்டுக்குந்தான்
நிமலாதி அனுமந்தன் தனைப்பெற்றாளே
கூரப்பாபாதாளம் தெரியச்சுவாகாஎன்று
குளம்பாதே அல்லைநீ தவிர்த்திட்டாரே. 88

அஷ்டகருமம் எட்டுக்கும் சக்கரத்தின் உயிரெழுத்து அறியவும்

வசியமே யக்கரமாகும்
அக்கிரே காரத்தாலே
உசிதமாய் அழைக்குமிந்த
உலகெலாம் அகாரந்தானும்
முசிகவுச் சாடனங்கள்
முட்டிடுந் தகாரந்தன்னை
பசிதவிதம் பணங்கள்
சாத்திடும் பகாரந்தானே. 89

காமெனும் பேதனங்கள்
சாற்றிடும் பகாரந்தன்னை
ஓமெனும் ஏடணைக்கு
உரைத்தது உகாரமாகும்
வாமெனுங் எட்டாங்கர்மம்
வகாரத்தி லறிந்துபாரிற்
நாமெனும் சக்கரத்தில்
நாடிய மூலந்தானே. 90

வாரமறியவும்

ஞாயரே வசியமாகும்
நலமுடன்சோமன் மோகம்
காய ஏடணையே பேதம்
கர்மமும் ரெண்டுஞ் செய்வாய்
வாய்வு தம்பனமே புந்தி
வளரு முச்சாடனமே பொன்னாம்
ஓயமாரணத்துக் கெல்லாம்
உரைப்பது மந்தனாமே. 91

வெள்ளியாக் ருஷணமாகும்
விளம்பிய அஷ்டகர்மம்

ஒட்டிய முனிவர்

மண்ணினா ரறிந்தாரிந்த
அவனியி லதிகமாகி
தன்னிய வுருவுமில்லை
சற்குருவ ரருளினாலே
துன்னிய உலகோற்கெல்லாம்
தோற்றுமொட் டியமிதாமே. 92

திசை யறியவும்

வசியமே கிழக்குமோக
மாரணந் தெற்கதாகும்
உசிதவுச் சாடனங்கள்
உரைப்பது மேற்கதாகும்
கசிதபே தனங்கள் தானே
காண்பது வடக்கதாகும்
பசிதஏ டணைகளெல்லாம்
பகர்வது கன்னியாகும். 93

தம்பனந் தென்கிழக்குத்
தனியாக் ருஷ்ணம்வாய்வு
உம்பர்க ளீசான்யத்தில்
உரைப்பது சகலகர்மம்
நம்பதம் அறிந்தால்சித்தி
நயமுட னறிந்துபார்க்க
வம்புக ளில்லாற்கிந்த
வகையெலாம் சித்தியாமே. 94

சகல கர்ம சித்தி மூலிகை

சுண்டையின் கொடியின்வேரை
தானெடுப்பதுவுஞ் சுக்ரன்
தொண்டனான் குருவைப்போற்றிச்
சுகமுடன் சாபந்தீர்த்து
தெண்டிரை சூழ்ந்தவேளார்
முகவனால்த் திரவதாகும்
அண்டையில் நிற்பாள்தேவி
அறிந்தவர் சித்தராமே. 95

பாட பேதம் : சண்டையின் கொடி

தேவி சக்காம் உயிரெழுத்தறியும்படி

வட்டத்தில் முக்கோணமிட்டு
மருவறு கோணமிட்டு
இட்டத்தில் வட்டமிட்டு
யீராறு சூலமிட்டு
மட்டருஞ் சூலந்தனை
வங்ஷ்ரீங் கென்றேகட்டி
கட்டிய எழுத்தையெல்லாம்
கருதிஓங் காரஞ்சுத்தே. 96

சுத்தெல்லா மெழுத்துப்போடு
சுழியெல்லாம் வவ்வெழுதி
வைத்தறு கோணந்தன்னில்
வயணமா ரெழுத்தெழுதி
முத்திய வட்டத் துள்ளே
ஓம்ஷ்ரீங் கென்று கட்டி
உத்ததோர் சக்கரந் தன்னை
உரைப்பது மெல்லா மாடே. 97

புந்திடச் சந்தனங்கள்
புட்பம் சவ்வாது குக்கில்
முந்திய மதுக்கள் மாம்சம்
முறைமுறை படைத்துச் சக்கரம்
விந்தையாய் வரைந்து சக்கரம்
விளம்புரு லக்ஷுந்தன்னை
வந்தவள் முன்னே நிற்பாள்
மகுத்தான கர்மந்தானே. 98

எல்லம்மாள் சத்தி நின்றாள் திருவுரு வகையறிய

இல்லமும் புரமுமாகி
எங்குமாய் நின்றாள்தேவி
சொல்லிய கர்மமெட்டும்
சூத்திர மாடுவாள்காண்
எல்லம்மை யானதேவி
இகத்தினில் கண்டவித்தை
புல்லிய கட்டையொன்றில்
புதுவுரு செய்வாய் சொன்னேன். 99

வேண்டிநீ வுருவே செய்ய
　　வினையொன்று மில்லை கண்டாய்
வேண்டிநீ பூசைசெய்ய
　　விருப்பமாய் நிற்பாள்தேவி
வேண்டிய அஷ்டகர்மம்
　　விதவித மாடுமுண்மை
வேண்டிநீ குருவாலிந்த
　　விதமெல்லா மறிந்துபாரே. 100

தந்திர அஷ்டகர்மம்
　　சற்குருவருளால் காண்பாய்
தந்திரங் கருக்கள்மூலி
　　சற்குரு காட்டவேணும்
மந்திரஞ் சித்தியாகும்
　　மனத்தினி லுரைப்புனாலே
சொந்தமாய்க் குருவைஇப்போ
　　துதித்தவொட் டியமிதாமே. 101

மனத்தினில் பக்தியாக
　　வணங்குவாய் குருவைநன்றாய்
மனத்தினி லுரைப்பதாலே
　　வகையெல்லா மறியவேணும்
மனத்தினில் தாமேயென்று
　　மறந்திடா நினைவுவேணும்
மனத்தினில் குருவாமிந்த
　　வகையெல்லா மறியதாமே. 102

ஒட்டியந் தன்னிலந்த
　　உட்கருவுரைத்த தெல்லாம்
கெட்டியா யறியவேணும்
　　கடாக்ஷமுங் குருவினாலே
திட்டமாய்க் கருவாலிந்தச்
　　செய்தொழில் சித்தியுண்டாம்
பட்டினி இருந்துசித்தி
　　செய்திடிற் பதவியாமே. 103

கருவன்றி மந்திரமில்லை
　　கருதுமந்தி ரத்தையன்றி

ஒட்டியம்

ஒருவருமுல கத்திலில்லை
உரைக்குமோ ரெழுத்துமில்ல
வரைவது சக்ரமன்றி
வணங்கிய கர்மமில்லை
திருவருள் தேவியன்றி
ஜெகத்தினிற் தெய்வமில்லை. 104

வானமும் பூமிகூட
வளநடு அஷ்டதிக்கும்
தானென நின்றதேவி
தாய்பதம் போற்றுவோற்கும்
நானென நிற்பாளாயி
நாட்டினில் பகையொன்றில்லை
வானவர் தேவர்கூட
வணங்குவார் திண்ணந்தானே. 105

ஒட்டியம் முற்றிற்று

######

உ

கடவுள் துணை

சல்லிய முனிவர் அருளிச் செய்த

சல்லியம்

காப்பு

ஆதிய மாந்திரீகம்
அறிந்துணர் முனிவர்தம்மில்
நீதிசேர் சல்யனெனப்பேர்
நலத்தினில் செய்தநூலை
தீதரு தமிழினாலே
செப்பவே யிணைக்கையான்றன்
சோதிசேர் செம்பொற்பாதம்
சூட்டினேன் சென்னிமீதே.

நூல்

செப்பிய வெழுத்தினாலும்
சிறந்தமந் திரத்தினாலும்
மொப்புரு கருவினாலும்
உணர்கின்ற கர்மமெட்டும்
தப்பிலாமுனிவன் வாக்கால்
சாற்றிய விதியிலங்க
யிப்புவி யறியவேண்டி
யியம்பினேன் தமிழினாலே. 1

ஆகியவசிய மோகன மாயந்த
ஆக்ருஷண பேதமாம்
யேகமா முச்சாட ணங்கள்
யேடணை யெட்டாங் கர்மம்
வேகமாய் மனத்தை யுன்னி
விளம்பிய மாந்திரீகம்
ஆகவே இவைகளெல்லாம்
ஆய்ந்தவ ரறிவுள் ளோரே. 2

குருமொழி தப்பா வண்ணம்
கூறிய தர்மவானாய்
யெரியுரு கோபந் தீர்த்து
யெவ்வுயிர்க் கிரங்கு வோனாய்
வெரியுரு பகையு மின்றி
மியமிக வாழ்வோனாகில்
திருவரு ளாலேசல்லியம்
சித்திக்கு முண்மைதானே. 3

பேதனம்

மஞ்சளி நுருவின் சூதந்
வாய்வயர் சென்னி கண்வாய்
கொஞ்சமாய்க் கருவைத் தொட்டு
கூறுவே மின்னங் கேளாய்
துஞ்சியாமின்னார் வேந்தர்
மாலையைச் சுத்தி வைக்கில்
அஞ்சுவார் பிரமை கொண்டு
அலறுவார் பெண்ணைத்தேடி 4

பாட பேதம் : அதவோர் பெண்ணைத் தேடி

சர்வ பேதனம்

தேடிய கக்குரு வாக்கி
செய்யவைங் காயம் கூட்டி
நாடிய சருவுந்தொட்டு
நாட்டினில் கருவுங்கூட்டி
ஆடிய நாக முள்ளு
அந்தந்த இடத்தில் குத்தி
ஜாடியி னடியில்வைக்க
தனியாடுங் கர்மமெல்லாம். 5

கர்மத்தில் மூலப்பாவை
கருத்தோடு காயம்கூட்டி
பெருமத்தன் சாறுவிட்டு
பேய்ப் பீர்க்கன் தயிலம்சேர்த்து
உறுமத் தியானம் தன்னில்
உருநூறு ஜெபித்தபோது
கர்மத்தின் தொழில்க ளெல்லாம்
கைகண்ட வித்தை தானே. 6

லோக வசியம்

தானொரு வெல்லுமூலி
தனிநிலப் பனங்கிழங்கும்
மானமாந் தாளகம்
வசிகரம் செய்ய வேண்டி
ஊனுருமத்தன் கருவும்தொட்டு
உருவிரு நூறுஞ்சொல்லி
தானென உலகமெல்லாம்
தனதாகும் வசியந்தானே. 7

மோகனம்

ஆனதோர் குரவன்கட்டு
அரிதாரம் துடரி மூலம்
நானென நிற்குமூலி
நாரத்தம் பழமும் சேர்த்து

வாநொரு மந்திரங்கள்
 வரிசையாய் நூறுஞ்சொல்ல
ஏனென மரமும்கல்லு
 மிதுபோக மிகத்திற்செய்யே. 8

ஸ்திரீ வசியம்

செய்யதோர் மந்திரங்கள்
 ஜெபிப்பது ஆயிரந்தான்
கையொடு காலும் தொட்டு
 வருவது கூடத் தொட்டு
மையது பற்றவைத்து
 வாவென்று நெற்றியிலிட்டால்
தையலா ரெவரும்தேடி
 க்ஷணத்தினில் வருவார்திண்ணம். 9

கண் கெடுத்தல்

திண்ணமாய் வாயில்சோறுந்
 திரும்பிய கருவைத் தொட்டு
விண்ணற நாக தந்தம்
 மேலது வுரைக்க வுன்னி
பண்ணுரு மந்திரங்கள்
 பகருறு நூறதாகும்
அண்ணலே தோற்றம்போகும்
 அரைவது எட்டிதானே. 10

மாரணம்

எட்டியின் முளையினாலே
 இயம்பிய கருவுதொட்டு
விட்டதோர் கருவிலூண்
 விளம்புமந்தி ரங்கள்தன்னை
மட்டது நூறுசொல்ல
 வகைவகை யாகத்தானே
திட்டமாய் நினைப்பதெல்லாம்
 சித்திக்கும் ஜெகத்திலன்னே. 11

ஜெகத்தினில் மந்திரங்கள்
 செப்பிய கருவுங்கூட்டி

சல்லியம்

அகத்தினில் மணத்தவளை
அதினுட வாயினுள்ளே
மிகப்படச் செலுத்திபின்னை
வேண்டும் பூமியில்வைக்க
வகுத்ததோர் வியாதியெல்லாம்
வைத்தனர் வளமையாலே. 12

வித்துவேஷணம்

ஆலடி சொரியன்றன்னில்
ஐங்காயம் வெள்ளைப்பாம்பூண்
மேலிடுகருவு புன்னை
விளங்குமந்தி ரங்கள்செய்து
மாலையிற் காலைதன்னில்
வளரேரி யிடத்தில்வைக்க
மேலெல்லாம் சொரியுமாகி
மிக்கதோர் வியாதியாமே. 13

வீட்டைவிட்டு ஓட்டுதல்

செய்யதோர் கொட்டைக்காயம்
தீர்க்கமாம் தும்பையென்று
வையதில் சக்கரங்கள்
மந்திரங் கருவுந்தானே
மையமா மறிகடக்க
மண்ணினிற் புதைத்துப்பின்னை
கையினில் கொடுபோவாரே
கற்றபோ ராவரென்னே. 14

பேதனம்

பேருடன் கருவுந்தொட்டுப்
புன்னையைங் காயங்கூட்டு
ஊரொடு சுத்திவந்து
ஊமச்சி நத்தமத்தம்
வேரினி புதைக்கப் பின்னை
மிக்கதோர் மத்தமாசி
ஆரெனக் கொண்டுபின்னை
ஆடுவார் பாடுவாரே. 15

மாரணம்

பாடிய மந்திரங்கள்
பத்துநூ றுருவைச் சொல்லி
வாடியனான நீனான்
மயானத்திலம் பேரினாலே
கூடியே முள்ளுக் குத்த
குறித்திடுங் குறிப்புத்தோன்றும்
மோடியே தாகமாகும்
ஒருவற்குந் தெரியாதுண்மை. 16

வசியம்

உண்மையாய் மந்திரங்கள்
உருநூறு சொல்லிற்றானால்
பெண்மையார் சாகும் காலம்
பேச்சிட்டு அதிதிகொண்டு
எண்ணிய கருவுந்தொட்டு
இருப்பது நந்தவானம்
திண்ணமாய் வருவாளென்று
செப்பினார் செப்பினாரே. 17

சத்துரு நாவடக்க

செப்பிய மந்திரங்கள்
ஜெயிப்பது ஐநூறாகும்
கைப்படுங் கருவுந்தொட்டுக்
காரியஞ் செய்வீராகில்
உய்வது சிரங்கைதொட்டு
உள்ளத்தில் வைத்துவாட்டி
எப்படிக் கொற்றபேரும்
இருப்பாரே நாவடங்கி. 18

வேறு வசியம்

அடங்கிய கூகையொன்று
அந்தணன் பட்சியொன்றும்
மாடத்தின் புறாவினெச்சம்
வகைவகை யாகச்சேர்த்து

சல்லியம்

துடங்கிய இடையினாற்கு
நூறுருச் சொல்லிச்செய்ய
படங்கிழி பாவையென்ன
பதையாம லிருப்பதாமே. 19

வேறு மாதர் வசியம்

இருக்கின்ற பிள்ளையோட்டில்
எடுக்கின்ற தைலந்தன்னில்
கடுக்கின்ற பாக்கிலூட்டிக்
காலனைச் ஜெபித்தபோது
அடுக்கின்ற மடவாரெல்லாம்
அவன்வச மாகித்தானே
தொடுக்கின்ற சேதிகேட்டு
சொல்லுவார் சல்பதுலோர். 20

இதற்கு மந்திரம்

லமவநசி, சியமவந, நமசிவய, வநசியம, வமநசிய
வேறு வசியம்

நூலதே எருக்கன்காம்பு
நூறுரு மந்திரங்கள்
காலவே காளிகோவில்
சன்னதி லற்புதமூட்டி
மேலுரு கருவுந்தொட்டு
வெண்ணற்றை வெள்ளைவைக்க
காலடி ரத்தமோடக்
கண்டவர் கருமஞ்செய்வார். 21

கல்லெரி குட்டி

செய்யநஞ் சுண்டுபோனார்
தியக்கரி கருவுந்தொட்டு
வெய்யமந்தி ரங்களஞ்சும்
ஆயிரம் விளம்பித்தானே
வையது பெரியவாசல்
வலப்புரம் நனையாவண்ணம்
கையினி லெரிதல்போல
கல்லெரிய நேகங்கோடி. 22

பேதனம்

கோடிநீ றாடைவேரும்
கூருமைங் காயந்தானும்
பாடிய மந்திரங்கள்
பத்துநூறுருவுஞ் சொல்லி
தேடிய கருவுந்தொட்டு
செய்வது வாளைத்தண்டில்
நீடிய பேதனங்கள்
நிச்சயம் அநேகமாமே. 23

ஸ்திரீகள் தரியாதிருக்க

ஊக்கிய வுருவுநூறு
அரம்பைபேய்க் கருப்பன்தண்ணீர்
தேக்குநீள் வண்டுகையில்
செய்கருக முகில்ச்செய்ய
நோக்கிய பேர்களெல்லாம்
நொடியினில் துடர்ந்துபின்னை
வாக்கினால் மனதினாலும்
வருவாரே மயக்கங்கொண்டே. 24

புருஷ வசியம்

கொண்டதோர் யோனியூகங்
கூட்டிய கருவுந்தொட்டு
விண்டபேர் கருப்பன்சாற்றில்
வேதித்து வுள்ளேசெய்ய
கண்டதோர் மன்னனாகும்
கன்னிக்குக் காதலாகி
அண்டையில் வருவாரென்ன
அரைந்தனர் அறிவுள்ளோரே. 25

ஸ்திரீ புருஷரை வசியஞ் செய்ய

ஒரோரு நான்குமூன்றும்
உணர்ந்த புல்லாமணக்கு
நேரவே வைத்துக்கொண்டு
நெய்யினிற் சிவக்கச்செய்ய

சல்லியம்

வாரமா யிருந்தபேர்க்கு
வாய்த்திட மயக்கமாகி
கார்சொரி குழலினாரை
காதலன் வணங்குவானே. 26

உச்சாடனம்

வானுரு சுழல்த்துரும்பு
வழிபண்ணும் காக்கைகூடும்
தானொரு யினத்தின்கொம்பும்
சாகதரத் தமுரிவீழ்தும்
ஆனதை யொன்றாய்கூட்டி
ஆயிர முருவைச்சொல்லி
கானதில் சுடலைவைக்க
கலைவுச்சா டனங்களாமே. 27

வாளருபட

உச்சமாங் கிறாணந்தன்னில்
ஒருசங்கின் வேரெடுத்து
வைச்சதோர் சுடலைசுத்தி
மாரியே வெட்டும்போது
நிச்சய மந்திரங்கள்
நினைப்பது முப்பதாக
மெச்சுவார் கையும்வாளும்
பரணியும் விழும்நிலத்தில். 28

சபை அடக்க

நிலத்திலே பிறந்தகூகை
நிணத்தொடு வூமன்கையில்
மணத்தொடு மண்ணிலோட்டி
வரிசையாய் நின்றதாக்கி
சிலத்துரு மந்திரங்கள்
நூறதுஜெபித்துப் பின்னை
மலைத்திரு சபைகள்முன்னே
வாயில்மண் விழுந்தாப்போல. 29

வியாதி நீங்க

விழுந்திடுஞ் சுணங்கன்பில்லும்
வெண்ணிறப் பாம்பினூணும்

சல்லிய முனிவர்

தெழிந்திடுங் கருவுந்தொட்டு
ஜெபிப்பது கழுவன்சொல்லி
அழிந்திடும் வியாதியென்று
அகன்றது க்ஷணத்திலிப்போ
குழந்தநிற் கரையிலேதான்
கொண்டது கோடிதானே. 30

மறைப்பு

கோலத்தின் விரையெடுத்து
கூறிய கருவுந்தொட்டு
சீலத்தில் மந்திரங்கள்
தெட்சணா மூர்த்தியாகும்
ஞாலத்திற் றன்னைக்காணார்
நமக்குப்பல் பேரைக்காட்டு
கோலத்தின் பூவும்வேரும்
கொண்டக்கால் சித்தியாமே. 31

உருமாற்றம்

சித்திக்குங் கருத்தபூனை
தெழிந்தது கதலிதன்னை
அத்திக்கும் வித்தோதொன்று
வாகையின் பிசினுங்கூட்டி
சத்திக்கும் பூஜைசெய்து
தானொரு வுண்டைகொள்ள
எத்திக்கும் பூனைபோல
இருந்திடும் பிறர்க்குத்தானே. 32

விலங்கு நெறிக்க

பிறந்ததோர் கருடன்முட்டை
பெரியதோர் கூடுபார்த்து
சிறந்ததோர் குஞ்சுவானால்
சொல்வது விலங்குகாலில்
பறந்திடும் போதுதானே
பலவிலங் கறுத்தமூலி
அறிந்துகொள் ளதுதெறிக்கு
மதுவொரு தீயில்சுட்டே. 33

பூட்டுத் தெறிக்க

சீருடன் "களௌளிகனிற்"
சிறந்தகூ டெடுத்துவந்து
பேருடன் கையில்தானும்
பேசாமல் வைத்துக்கொண்டு
நீருடன் கலந்துவிட்டால்
நேராக ஏறுமூலி
மாருடன் பூட்டிவைக்க
மடக்கென்று தெறிக்குந் தானே. 34

" கருடனதனிற்" என்றிருக்க வேண்டும்.

ஸ்திரீ மோகஜெயம்

கல்லூ மச்சியைக்
காயழ வரைத்துமே
வெல்லூ மச்சியின்
வெண்ணையில் கொண்டிட
தொல்லூ மச்சியின்
துதிக்கை யதாகுமாம்
பல்லூ மச்சிகள்
பதறி நடுங்குவாரே. 35

சத்துருவை ஜெயம்பண்ண

சொல்லிய முட்டைதன்னில்
சுடலைமையுரு வெழுதி
வில்லிய கருவுஞ்சொல்லி
வில்மணி யடித்தபோது
புல்லிய கர்மமெல்லாம்
புகட்டிடும் கருவாலாடும்
சல்லியம் சல்லிவேறு
சத்துரு ஒன்றுமில்லை. 36

வியாதி யுண்டாக்குதல்

இல்லத்தின் புறாவின்முட்டை
இந்திர கோபப்பூச்சி

சல்லிய முனிவர்

வல்லூற்றின் குருவின்பித்து
வளங்கிய கருவுந்தொட்டு
மெல்லவே காளிதன்னை
விரைந்தொரு நூறுஞ்சொல்ல
சல்லியன் சொன்னவார்த்தை
தப்பாது தரணிமீதே. 37

சத்துரு பேதனம்

தாரணி யனுதன்சித்து
தானவர் கருவைத்தொட்டு
காரமும் நாசங்கெட்டு
காலடி மண்ணிற்செய்ய
வீரணம் பாதிகாணும்
வீடெங்கும் குரங்காய்தோற்றும்
தாரணி யதிசெயங்காண்
சத்ருபேதனமே கொள்ளும். 38

மாரணம்

கொள்ளிமால் சுடலையோட்டில்
குறிப்புள்ள காளிசெய்து
துள்ளிசா முண்டிசொல்லி
தொழில்கரு மூன்றுஞ்செய்து
கிள்ளியே சாத்தான்கோவில்
கீழடி புதைப்பீராகில்
உள்ளதோர் கர்மமெல்லாம்
உண்டாகு மிகத்திற்றானே. 39

இதுவுமது

இகத்திலே மயானருத்திரன்
இருநூறு உருவைச்சொல்லி
அகத்திலே கருவுரெண்டும்
அப்புரங் கள்ளிக்கட்டை
முகத்திலே காயமிட்டு
முன்னடி கீழேவைக்க
மகத்தான கர்மமெல்லா
மருவிநின் றாடுமொன்றே. 40

சல்லியம்

காளி உச்சாடனம்

மருவிய கழுப்பிணத்தில்
மணிமிசை நரம்புகோர்த்து
வெருவிய விலாவிற்கட்டி
விளம்புவார் கழுவுதன்னை
கருதிய கர்மமெல்லாம்
கண்கொண்டு பார்க்கலாகும்
குருகிய போதுதானே
கொடுங்காளி என்னலாமே. 41

வசியம்

ஆயில்யந் தொட்டால்வாடி
அரணைவால் கால்க்கீழ்மண்ணும்
மோகினி மந்திரத்தை
முன்னூறு வுருஜெபிக்க
தோகைக ளங்கிருந்து
துடருவா ளிவளைத்தேடி
நாகிளங் கன்றுபோல
நலஞ்செய்வார் நாதனாணை. 42

மாரணம்

ஆடிய பேயழிக்கும்
அக்கினி பேதமாகும்
நீடிய மகரந்தன்னை
நீமுதல் நரம்பில்கோர்த்து
தேடிய விலாவில்கட்டி
திரும்பிய கழுவன்தன்னை
சூடியஅருசி நெல்லுப்
பொறி யெனச்சொன்ன வாரே. 43

வேறு மாரணம்

ஒரொரு வல்வால்த்தோலில்
உருவெனக் காளிசெய்து
பேருள்ள கருக்கள்மூன்றும்
பேசுமைங் காயம்பூசி

சல்லிய முனிவர்

காருரு முள்ளுக்குத்தி
காளியைச் செபித்துப்பின்னை
காரண மெட்டாங்கர்மம்
கைகண்ட வித்தைதானே. 44

வேறு மாரணம்

எல்லாரும் பார்க்கும்போது
எரிகிடாய் தடுக்கவெய்து
சொல்லிய தொலிப்பாவேரை
சுத்தியே நகாரஞ்சொல்ல
கல்லினுங் கடினமாகிக்
கத்தியு மழுங்கலாகி
கொல்லனும் பகைவனாகி
கூருவா ரேதோவென்று. 45

சர்வதேவதையும் ஓட்ட

ஏதுவாம் பன்றிவிட்டை
இருமலம் சிவந்ததூசு
ஆதியாம் தைலஞ்சேர்த்து
ஐங்காயம் தன்னைக்கூட்டி
வீதியில் புகையைக்காட்ட
வெருண்டோடு மையன்காளி
மாதுசாமுண்டி மத்த
மாகாளி யோடும்பாரே. 46

உச்சாடனம்

மானிலந்தன்னில் நின்ற
மானிட ராடவேண்டி
ஊனொரு கொடியைச்சுத்தி
ஓங்கார முதலாய்ச்சொல்லி
தானெனு மடுப்பில்போட
சகலற்கும் பிணக்காய்சுற்றும்
ஏனென ஆடிக்கொள்ளும்
இருந்தவர் தலையைச்சுற்றும். 47

சல்லியம்

முத்து உண்டாக்கல்

சுத்தியவ காரஞ்சொல்ல
சொன்னமீன் பட்டுக்கொள்ளும்
மத்தொரு சிகாரஞ்சொல்ல
வந்தமீ னோடிப்போகும்
முத்துமாய்க் கோரஞ்சொல்ல
முத்துப்புக் கெட்டுப்போகும்
மத்தியே காரஞ்சொல்ல
நல்லமுத் துண்டாம்பாரே. 48

மகிமைச்சித்து ஆட

மேலொரு வுகாரஞ்சொல்ல
சமுத்திரம் பொங்கிநிற்கும்
மூலமாம் அகாரஞ்சொல்ல
முன்னலை யொதுங்கிநிற்கும்
கோலமா யிகாரஞ்சொல்ல
குளிர்ந்தநீர் வெதுப்புக்காணும்
பாலமா யிதையறிந்து
பக்குவம் செய்தால்நன்றே. 49

குளம் உடையாமலிருக்க

வெதுப்பும்நீர் குளிரவேண்டில்
விளம்பு ஐங்காரமொன்றே
ததும்புநீ ருடையாவண்ணம்
சாத்துவர் கிலியைமுன்னே
விதம்பெரு மயிர்கள்நாளும்
விளையவேயேன அஆகும்
பதுங்கியே விளையாடும்
பாடுவா ரவரோவென்றே. 50

புழுப்போக

ஒவ்வன வெழுத்தையோதப்
புழுஓடிப் போகுமன்றி
சிவ்வொடு அவ்வுவிட்டு
ஜெபிக்கநீழ் மூக்கம்பாகும்

சல்லிய முனிவர்

அவ்வுடனே கிலியைவிட்டு
ஆடுதீண் டாரைச்செய்ய
செவ்வுடன் கரியைப்பூசி
செத்ததும் தீர்ந்துபோமே. 51

சகலமான புழுபோக

தீர்ந்திடும் ஏ நா சொல்ல
கிருகுருந்தடிப் புழுக்கள்
கூர்ந்திடும் ஐ ஆ சொல்ல
அகன்றிடும் கோட்டான்தானும்
ஊர்ந்திடும் புழுக்களெல்லாம்
மிருகத்தின் செம்மான்தண்ணீர்
ஆர்ந்திடம் பெரியோரெல்லாம்
அவனியில் மன்னராமே. 52

காய்க்க பூக்க–பூவும் பிஞ்சுமுதிர

நிர்மையில் கிலிஓம்சொல்ல
நிலைமர மெத்தக்காய்க்கும்
சீர்மையில் ஐ ஏ சொல்ல
சிறுமரந் தன்னில்பூக்கும்
பார்வையில்க கசிசொல்ல
பசுமரமு திருங்காயும்
ஓர்மையில் உஆசொல்ல
உதிருமே தளிரும்பூவும். 53

மந்திரமெழுதி மரத்தில் புதைக்க காய்க்காது

உவ்வொடு தாரஞ்சொல்லி
ஒருமித்து எழுதும்போது
அவ்வொடு பிரமும்காய்க்கும்
அந்திநீழ் மரத்திலென்றே
சிவ்வொடு ஐயைச்சொல்ல
ஜெகத்திற்காய்க் காதேநிற்கும்
மவ்வொடு வவ்வும்சொல்ல
மரமெலாம் இலைத்துக்காணும். 54

அரவத்தின் உச்சாடனம்

உம்மென்ன ஓவென்ன
ஓதவே அரவம்நிற்கும்
அம்மென எஓவென்ன
ஆடிடும் அரவந்தானும்
நம்மெனக்கிலியே யென்று
நண்ணுவா யரவடங்கும்
வம்மென யா யாவென்ன
வந்திடு மரவமோடும். 55

ஓடுமே சீயாம்யென்ன
ஊமெனச் சீறிநிற்கும்
பாடியே நவ்வையென்ன
பயந்தது ஒதுங்கிப்போகும்
நீயயே கிலியெங்கென்ன
நிறைவாயில் ரத்தங்கக்கும்
நாடி வாவென்று சொல்ல
நகர்ந்திடும் அரவந்தானே. 56

விட்டிடும் விஷங்களெல்லாம்
விரைந்திடும் நங்சிங்கென்ன
தொட்டநேர்வாளந் தன்னை
சொல்லுவார் விஷத்துக்கெல்லாம்
விட்டதுதனக்கு அங்ஊங்கென்ன
விழுந்தவன்பிழைத்து கொள்வான்
பட்டவன் பிழைக்கவேண்டி
பகர்கிலி வென்றோதே. 57

கெருட வித்தை

ஏவொடு நவ்வேயென்ன
யெதிர்வரும் கருடப்பக்ஷி
சீவொடு கிறியுமென்ன
சென்றிடு மரவந்தூக்கி
ஆவொடு நாவோவென்ன
அரவமவ் விடத்தில்போமே
வாவொடு நவ்வியென்ன
மயங்கியே கருடநிற்கும். 58

மிருக வித்தை

நின்றிடுஞ் சிஓவென்ன
நேரிட்ட மிருகமெல்லாம்
சென்றிடும் கிலியாவென்ன
சினத்திடு மிருகமெல்லாம்
ஒன்றிய அங்ஐயென்ன
ஒதுங்கியே விலகிப்போகும்
அன்றிய அய்யாவென்ன
ஆடிடுமிருகந்தானே. 59

அஷ்ட சித்தி வசியம்

வாய்த்திடுங் கர்மமெல்லாம்
வகைவகை யுரைத்தபின்னை
சாத்திய மந்திரங்கள்
தானது வுரைக்கக்கேளாய்
வாய்த்திடுஞ் சத்தியெட்டும்
மையத்தில் சக்காதேவி
மூர்த்திய மந்திரங்கள்
மொழிந்தனர் முன்னுள்ளோரே. 60

எக்கலாதேவி மந்திரம்

ஏங்கிலியுங் காளிகாளி
எக்கலாதேவி ராரா
ஆங்குரோம் சௌவும்அம்
ரா ரா ரா ராவென்று
பாங்குரு சத்திரண்டும்
பதிப்பது கிழக்குத்தானே
நீங்கதே நிற்குமென்று
நிலைபெறச் சொல்கின்றாரே. 61

ஆயிடா கிளியுமசத்தி
ஆறியே யாறியாறி
மாயுமா காளிதல்லி
மல்லம்மாள் ரா ரா ரா ரா
சாயினி லாங்கிலாங்கி
ஜாலக்காள் ரா ரா ரா ரா

சல்லியம்

வேயதோர் சத்திரண்டும்
விளம்பிய தெற்கதாமே. 62

உம் ஆங்காரி ஓங்காரி
வீரம்மாள் ரா ரா ரா ரா
ஓம்ஸ்ரீ நீலகாளி
ஆயிலக்கா ரா ரா ரா ரா
சிம்உரை சத்திரண்டும்
இருப்பது மேற்கதென்றும்
மும்மறை சல்யனான
முனிவனும் மொழிந்தவாரே. 63

வாருநீ சத்திதாயி
மகமாயி புட்டியம்மாள்
நீருநீலி நீலி
நீலம்மா ரா ரா ரா ரா
கூறிய சத்திரண்டும்
குறிப்பது வடக்கதாகும்
சீரிய முகமாயம்மா
நின்றனள் சக்காதேவி. 64

தேவியின் னுருவைத்தொட்டு
ஜெபிப்பது தன்னைக்கேளாய்
யேவிய மந்திரங்கள்
இருபத்தெண் ணாயிரத்தில்
ஓவிய தொட்டியப்பெண்
போலுரு வெளியாய்த்தோன்றும்
ஆவியாஞ் சல்யவேருக்
கவளென வுரைக்கலாமே. 65

மேத்திசை இருந்துநோக்கி
ஜெயிப்பதுச் சாடனங்கள்
வாத்திடும் வடக்குத்தானே
வந்திடும் பேதனங்கள்
தோந்திய கிழக்குமோகம்
வசியமாம் சொல்லலாகும்
ஏத்திய திசையாந்தெற்கில்
இயம்பெட்டாங் கர்மமென்றே. 66

கன்னிமா மூலைதானே
 கருதுமே டணையதாகும்
மன்னிய வாய்வுமூலை
 வந்தவர் கருணையாகும்
சொன்னதோ ரீசான்யத்தில்
 சொல்வது சகலகர்மம்
என்னவே சல்லியத்தோ
 ரியம்பினா ரின்னுல்தானே. 67

தானெனச் சுழித்துவாங்கித்
 தனித்துனால்ச் சுழியுமிட்டு
ஆனதோர் வட்டமிட்டு
 அப்புரம் சூலமிட்டு
ஊனென வெழுத்துமிட்டு
 ஒழிவது சக்கரங்கள்
மேனெனுஞ் சக்காதேவி
 மந்திர மெழுதினாரே. 68

ஆரோறுங் கர்மந்தன்னில்
 ஆயிரங் கர்மமாகும்
ஆரொரு ரண்டுசத்தி
 அவளொடு சகியேயாகும்
ஆரொரு கருக்கள்மூன்றும்
 அவளுக்கு வுடலதாகும்
ஆரொரு சல்லியமூலம்
 அவளுக்கு வயிறதாமே. 69

ஆக்கின மந்திரங்கள்
 ஆதரித் துருவேயானால்
வாக்கினால் மனத்தினாலும்
 மருளுரு மொழியினாலும்
நோக்கினால் நோக்கும்போது
 நொடியினில் கர்மஞ்செய்யில்
வாக்கினால் மனத்தினாலும்
 மதித்திட்டார் பெருமைபெற்றோர். 70

பெற்றவோங் காரமுன்னே
 வைக்கில்பே தனமாம்சொன்னேன்

சல்லியம்

மற்றது மோகமாகும்
மருவுஐங் காரம்சேரில்
சொற்றது கர்மமாகுந்
தொகுத்தஏ காரஞ்சேரில்
கற்றது எல்லாமிந்தக்
கருத்தினா லாடிநிற்கும். 71

நின்றிடு நகாரஞ்சொல்ல
நிலைக்கு முச்சாடணங்கள்
வென்றிடுஞ் சிகாரஞ்சேரில்
விளைந்தஆக் ருஷணமாகும்
ஒன்றினல் இகராஞ்சொல்ல
ஒத்தாடும் எட்டாங்கர்மம்
மன்றினில் செய்துபார்த்து
வகையதாய்த் தெரிந்துகொள்ளே. 72

வண்ணமாம் கோலப்புள்ளி
சித்தாடை மருங்கில்சாத்தி
எண்ணையுந் தலையுமாக
இந்தனக் குச்சிமோந்து
வெண்ணிறத் தந்தம்கொண்டு
மெய்யெல்லாம் வேர்வையாக
கண்ணது சிவப்பதாகக்
கைதனில் வளையடக்கே. 73

அடுக்கிய சிவந்தபாசி
மாலையா பரணமாக
இடுக்கிய தூசுமாக
ஏமனு மொழியுமாக
கொடுக்கிய கொடுக்குமாக
கோனொரு நொண்டியாக
வெடுக்கென நடையுமாக
மேல்முகம் பார்வையாமே. 74

வகையறிய

சல்லிய வேறுதன்னைச்
சதிருட னுலகமெல்லாம்

சல்லிய முனிவர்

மல்லிய லறியொண்ணாமல்
மயங்கினா ரனேகம்பேர்கள்
தல்லிய நீற்குமூலி
தன்மையை இன்னதென்று
சொல்லிய முனிவன்வாக்கால்
தொட்டியப் பூடிதாமே. 75

ஏக மூலிகை

பூடதை யறிந்தாராகில்
பூதலந் தன்னிலிப்போ
ஆடலாம் யெட்டோடெட்டு
அறுபத்து நாலுசித்தும்
வாடியே திரியவேண்டாம்
வல்முனி யருளினாலே
காடெலா மிருக்குமூலி
கண்டுகொள் நிக்ஷயமாமே. 76

பக்ஷமறிய

நிக்ஷயம் சொல்வேன்கேளு
நீயொரு சித்தனாக
பக்ஷம் பரிந்துபார்த்து
பக்தியாய் பூசைசெய்து
வச்சதோர் தேவிதன்னை
மனதில் நினைந்துகொண்டு
உச்சத்தி லிருப்பாயாகில்
உறுதியென் றறிந்துகொள்ளே. 77

மல்லம்மாள் தொகுப்பு

கொள்ளவே மல்லம்மாளை
குறிப்புட னறியவேண்டி
விள்ளாமல் விள்ளுமந்தரம்
விவரமாய்த் தெரிந்துகொள்ளு
கள்ளமாம் கருவுரண்டும்
கருத்தினி லிருத்திச்செய்ய
பள்ளமாய்க் கிடந்தசித்து
பலிப்பது நிசந்தானென்னே. 78

மந்திரம்

பலிப்பது சொல்வேன்கேளு
    பண்பான மந்திரங்கள்
கலிப்பது அம்அம்மென்று
    காட்டியா யுருஜெபித்து
சலிப்பது நீக்குநீயும்
    பண்ணுவாய் இருநூற்றெட்டு
பலிப்பது யாருக்குந்தான்
    பாக்கிய மிந்தநூலே. 79

இந்த நூல் முழுதும் பார்க்க

இந்தநூல் முழுதுமாய்ந்து
    இனியதோர் கர்மமெல்லாம்
சந்தேக மறவேபார்த்து
    சகலமும் தெரிந்துகொண்டால்
நிந்தைக ளனேகமுண்டாம்
    வெகுகோடி விந்தையாகும்
பந்தமாய்ச் சொல்லிவிட்டேன்
    பாரினில் மாந்தருக்கே. 80

இந்நூல் பழிக்காமலிருக்க வேண்டியது

பாரிலே இந்தநூலைப்
    பழித்தவர் நரகஞ்சேர்வார்
பாரிலே இந்த நூலைப்
    பழியாட்டால் சொர்க்கமாகும்
பாரிலே வழியாமின்னூல்
    பகைவரை செயிக்கவேண்டி
பாரிலே இந்த நூலை
    பான்மையாய் அறிவாய்சொன்னான். 81

சூட்சமறிய

சொன்னதோர் சல்யந்தன்னில்
    தொகுத்தது நூறுகர்மம்
பின்னமில்லா மல்செய்ய
    பிழையொன்று மில்லைகண்டாய்

நன்னயமாகு மிந்நூல்
    நயம்பெற வாழ்த்திக்கொண்டு
சொன்னதோர் தொகுப்பையெல்லாம்
    சூட்சுமமறிந்து கொள்ளே. 82

மந்திரத்திற்கு வாரமறிய

ஆதியசத்தி யெட்டும்
    அவ்ளுக்கே யேவல்செய்ய
மோகினி சுரூபமாகி
    முறைமுறை கர்மமெல்லாம்
சேகினி செய்யவேண்டி
    வருவாளே சக்காதேவி
ஏகமா மந்திரத்துக்
    கியம்பிய வியாழந்தானே. 83

திக்கு நோக்க

இயம்பிய மலர்சிகப்பு
    இருப்பது கிழக்குநோக்கி
வயம்பெரும் நாற்காறெண்டும்
    வழியுடன் செய்துபார்க்கில்
நயம்பெரும் மதுவும்மாம்சம்
    நாட்டமாம் பாயஸங்கள்
செழுந்தொழில் பூசையென்று
    செப்பினார் தெரிந்தவல்லோர். 84

தியான சித்தி

வல்லதோர் தியானத்தாலும்
    மந்திரம் ஜெபத்தினாலும்
சொல்லிய கருவினாலும்
    சுத்தமா மனத்தினாலும்
எல்லம்மாள் துணையினாலும்
    இயம்பிய சத்தியாலும்
மெல்லிய சக்காதேவி
    விரைவுடன் சித்திசெய்யே; 85

வெள்ளிமயத்தில் பூசை செய்ய

சித்தியாய் வந்தபோது
சிதத்தினில் கர்மமெல்லாம்
சித்தியாகா தொன்றில்லை
தேவியை நினைந்தபோது
விந்தையாந் தொழிலுக்கெல்லாம்
விளம்புவோ மின்னங்கேளாய்
மத்தியாம் வெள்ளிவாரம்
மதியந்தான் பூசைதானே. 86

பூரண கிருபை உண்டாக

பூசையும் பலியுஞ்செய்ய
பூரணகிருபை யாகி
பூசைக்கும் தொலிக்குந்தானே
பொருந்துவள் சக்காதேவி
ஆசைக்கு இவளேயன்றி
அவனியில் தெய்வமில்லை
நேசிக்கச் சல்யனென்போன்
நிக்ஷயம் சக்காளாமே. 87

தொழில்களுக்கு வாரமறிய

சக்கிய ஆதிவாரம்
ஆனதோர் வசியமாகும்
மிக்கதோர் திங்கள்வாரம்
விளையாடு மோகனந்தான்
முக்கியஞ் செவ்வாய்வாரம்
மொழிந்தபேத னத்துக்காகும்
புக்குரு புதனைத்தானே
புகழ்ந்தனர் ஏடணையீதென்றே. 88

ஏந்திடுங் குருவாரத்தில்
இயம்புமுச் சாடனங்கள்
ஆந்திடும் வெள்ளிதானே
அறிந்துஆக் ருஷ்ணமாகும்
ஏந்திடு மந்தவாரம்
மொழிந்திடு மெட்டாங்கர்மம்

சல்லிய முனிவர்

ஆய்ந்தவ ராய்ந்து கொள்வார்
அறிவினி லறிந்துகொண்டே. 89

தொழில்களுக்கு உடையறிய

வசியமே சிவந்தஆடை
மஞ்சளே மோகமாகும்
கசியுரு சிவந்தபட்டு
கருதிய வெட்டாங்கர்மம்
இசையுரு வெள்ளைதானும்
இயம்பினார் பேதனங்கள்
அசையுரு பச்சைப்பட்டு
ஆடுமுச்சா டனமுமாமே. 90

காப்புக் கட்ட

மெல்லிய சல்லிவேரை
வெள்ளியுங் காலைதன்னில்
அல்லிவாய்க் காப்புக்கட்டி
அறுநூறுவுரு ஜெபித்து
செல்வியை நினைந்துகொண்டு
செய்யதோர் பலிகொடுத்து
எல்லிய கர்மமெல்லாம்
எனக்குநின் றாடவெய்யே. 91

வேர் பிடுங்க

நின்றாட வேணுமம்மே
நிர்ணயம் நினைந்துகொண்டு
அன்றாட முந்தானே
அன்புடனுருஜெபிக்க
என்றிய எட்டாநாளில்
பிடுங்கவ துரைக்கக்கேளாய்
நன்றதாய்ப் பெலியும்பூசை
நடத்தினீ பிடுங்கு வாயே. 92

வேர் மந்திரம்

பிடுங்கிய சல்லிமூலம்
பின்னிட்டுக் கீழாய்த்தூக்கி

ஒடுங்கிய வுண்டைபோது
வுடைத்துவுள் காம்பெடுத்து
திடம்பெற நெய்துத்
தினந்தினம் பதப்படுத்தி
இடம்பெரு பதனமாக
இதனைநீ வைத்துக்கொள்ளே. 93

மல்லக்காள் காவல்

வைத்தபின் செய்ததெல்லாம்
மல்லக்காள் காவலாக
செய்த்தொழில் சக்காதேவி
சித்துக்கும் இந்துவேரில்
நித்தியம் நினைந்தபேர்க்கு
நின்றாடுங் கர்மமெல்லாம்
சத்தியஞ் சத்தியமென்று
சல்லியன் சொல்லுவாரே. 94

கைகண்ட வித்தை

வாமமா முகத்தினுக்கு
மருவிய கர்மஞ்செய்வான்
ஏமமும் சாமந்தானு
மிருப்பாளே இடதுபக்கம்
காமனைக் கண்டபேர்க்கு
கைவல்ய மாகுமென்றும்
காமனைக் கண்டால்தானே
கைகண்ட வித்தையாமே. 95

வீரம்மாள் காவல்

வித்தையா மதனனுக்கு
வீரமக்காள் காவல்
சத்தியின் பூசைசெய்து
தனிப்பட இருக்கவேணும்
சித்திர மஞ்சள் தன்னில்
திருவுருக் கொள்ளவேணும்
உத்தமம் பூசையென்று
உரைத்தன ருறவுள்ளோரே. 96

தேர்ந்து கொள்ள

ஓரொரு கர்மங்கற்றோர்
    உலகெலாந் தானாய்நிற்பார்
ஓரொரு கர்மங்கற்றோர்
    ருயர்ந்ததோர் பெரியோராவார்
ஓரொரு கர்மங்கற்றோர்
    உன்னித மாவாரென்றே
ஓரொரு கர்மங்கற்றோ
    ருயர்குருவருளே வேணும். 97

தோத்திரம்

குருவரு ளாலேசல்யன்
    கூறினதொழில்க ளெல்லாம்
குருவரு ளாலேதெய்வம்
    குறிப்புடனறிய வேணும்
குருவரு ளாலேதெய்வம்
    திருவருள் தானேமுத்தி
குருவிரு பாதம்ரண்டும்
    கொண்டனன் சென்னிமீதே. 98

சல்லியம் முற்றிற்று.

****

"""""""""""

——

மாந்திரீக மூலிகைகள்

மாந்திரீகத்தின் எட்டு அங்கங்கள் : 1. ஆகர்ஷணம், 2. உச்சாடனம், 3. தம்பனம், 4. பேதனம், 5. மாரணம், 6. மோகனம்; 7. வசியம், 8. வித்து வேடனம்.

இந்த எட்டு வகை மாந்திரீக வேலைகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் எட்டுவித மூலிகைகளை உபயோகிக்க வேண்டும் என்று அகஸ்தியர் தமது அஷ்டாங்க சித்து என்ற நூலில் கூறுகிறார். அகஸ்தியர் வரையறுத்தபடி மாந்திரீக மூலிகைகள் அறுபத்து நான்கு என்று எடுத்துக் கொள்ளலாம்.

1. ஆகர்ஷணம்

ஆகர்ஷணம் என்பதற்கு தன்னை நோக்கி இழுத்துக் கொள்ளுதல் என்று பொருள். மனிதர்களை ஆகர்ஷிக்கலாம். மிருகங்களைக் கவரலாம். பொருள்களையும் தன்னை நோக்கி வரச்செய்யலாம். ஆகர்ஷணம் என்பது வித்தை காட்டுவது போல் ஒருவர் தனக்கு எதிராக பயன்படுத்த விரும்பும் பொருள்களை அவரிடம் அகப்படாமல் தன்னை நோக்கி வரச்செய்து தற்காத்துக்கொள்வதற்கு உதவுகிறது.

தனது ஆகர்ஷண சக்தியால் எத்தனையோ விதங்களில் பிறருக்கு உதவி செய்ய முடியும். மாந்திரீகம் போன்ற அபூர்வமான செயல்களை பிறர் நன்மை குறித்துச் செய்தால் மட்டுமே சிறப்படையும்.

ஆகர்ஷண மூலிகைகள்

1. வேளை, 2. உள்ளொட்டி, 3. புறவொட்டி, 4. சிறுமுன்னை, 5. குப்பைமேனி, 6. அழுகண்ணி, 7. சிறியானங்கை, 8. எருக்கு.

இவற்றில் வேளையும், குப்பைமேனியும் பிராணிகளை ஆகர்ஷிக்க உபயோகப்படுகின்றன. உள்ளொட்டியும் அழுகண்ணியும் பெண்களை ஆகர்ஷிக்க உபயோகப்படுத்தப் படுகின்றன. புறவொட்டியும் சிறுமுன்னையும் அரசர்கள், பிரபுக்கள் போன்ற பெரிய மனிதர்களை ஆகர்ஷிக்க பயன்படுத்தப்படுகின்றன. சிறியானங்கை எல்லோரையும் எதை வேண்டுமானாலும் ஆகர்ஷிக்க பயன்படுத்தலாம். எருக்கு மட்டும் ஒரு தனிச்சிறப்பைப் பெறுகிறது. தேவர்களை ஆகர்ஷிக்க மட்டுமே இதை உபயோகப்படுத்துகிறார்கள்.

2. உச்சாடனம்

உச்சாடனம் என்பது தனது மாந்திரீக சக்தியால் பேய் பிசாசுகள் போன்ற தீய சக்திகளை மிரட்டி துரத்துவதாகும். இதில் பயன்படும் மூலிகைகள் உச்சாடன மூலிகைகள்.

1. **பேய் மிரட்டி** : இது பயங்கர மிருகங்களை மடக்கி துரத்துவதற்கு உபயோகிக்கப்படுகிறது.

2. **மான்செவிக் கள்ளி** : பகைவர்களை அவர்கள் மறைந்துள்ள இடங்களில் இருந்து வெளிப்படுத்தி துரத்துவதற்கு உதவுகிறது. எதிர்த்து வரும் பகைவர்களை திருப்பி ஓட்டவும் இது பயன்படும்.

3. **தேள் கொடுக்கி** : இந்தச் செடியின் அபூர்வமான குணம் நமது உடம்பில் எவ்விடத்தில் விஷம் அல்லது விஷக்கிருமிகள் இருந்தாலும் வெளியேற்ற உதவுகிறது. , மற்றவர்களுக்காக உபயோகிக்கும்போது அபூர்வமான முறையில் பலன் கொடுத்து விஷத்தால் உண்டான வேதனைகள் மரணாபாயத்தையும் போக்குகிறது.

4. **கொட்டைக் கரந்தை** : குளங்கள் அல்லது கிணறுகளிலுள்ள பாம்பு, ஆமை, சுறா முதலான பிராணிகளை அவற்றிலிருந்து வெளியேற்ற உதவுகிறது.

5. **வெள்ளைக் கண்டங்கத்திரி** : ஒருவன் மாட்டைத் திருடிக் கொண்டுபோய் தனக்கு வேண்டியவரின் மந்தையில் சேர்த்து மாடோடு மாடாக ஓட்டிச்செல்கிறான். அப்படிப்பட்ட சமயத்தில் மாந்திரீகர் உச்சாடனம் செய்யும் பொழுது அந்த மாடு மட்டும் தனியாகப் பிரிந்து வெளியே ஓடிவந்துவிடச் செய்யக்கூடியது.

6. **மருதோன்றி**

7. **புல்லுருவி** : இவை இரண்டும் பிரமை பிடித்தவர்கள் ; தீய சக்திகளுக்கு ஆளாகி வெறி பிடித்தவர்கள் போன்றவர்களுக்கு நன்மை செய்ய உதவுகின்றன. மருதோன்றியை வைத்து உச்சாடனம் செய்யும்பொழுது வெறி பிடித்தவர் சில வினாடிகளுக்குள் குணம் மாறி சாதுவாக ஆகிவிடுவர். அவரைப் பிடித்திருந்த குட்டிப்பேய் ஓடிவிடும்.

8. **பிரம்ம தண்டு** : மஞ்சள் பூக்களையுடைய முட்செடி பிரம்மதண்டு. பெரும்பாலும் பாழ்மனைகள், பாழடைந்த கட்டிடங்கள்

போன்றவற்றிலேயே முளைக்கக் கூடியது. அதிக ஜனநடமாட்டம் இல்லாத வாய்க்கால் குளக்கரைகளிலும் வளர்ந்து கிடக்கும். இந்த மூலிகையின் அபூர்வ குணம் தீய கிரகங்களால் ஏற்படும் பாதகங்களைப் போக்கக் கூடியதாகும்.

3. பேதனம்

அதாவது வேறுபடுத்துவது பிரிப்பது. நண்பர்களைப் பிரிப்பது. கணவர் மனைவிகளைப் பிரிப்பது, தாயையும், பிள்ளையையும் பிரிப்பது போன்ற பாதகச் செயல்களுக்கு பேதன மந்திரங்களையும் மூலிகைகளையும் பயன்படுத்தக் கூடாது. அப்படிப் பயன்படுத்துபவர் மறுமையில் நரகத்தை அடைவார் என்பதைத் தவிர உயிருடன் இருக்கும்போதே கைமேல் பலன் கிடைத்தாற்போல் கடுமையான தண்டனைகளை அனுபவிக்கவும் நேரிடும்.

அப்படியென்றால் பேதனத்தை எதற்காகப் பயன்படுத்தலாம். தன்னிடம் இருக்கும் அறியாமையை விலக்கலாம்; நோயை விலக்கலாம். நான்கு பேர் கூட்டுச் சேர்த்து கொண்டு ஊரையே மிரட்டி அட்டூழியம் செய்கிறார்கள் அவர்கள் ஒருவருக்கொருவர் மாறுபட்டு விலகிப்போகும்படி செய்யலாம். எதிரிகள் தன்னை அணுகாதபடி செய்து தனக்குப் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளலாம். துஷ்ட விலங்குகளை பேதனம் பண்ணி விரட்டிவிடலாம். ஒருவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் போது பேதன மந்திரத்தால் நோயை விலகச்செய்து பிறகு தக்க மருந்து கொடுத்து குணப்படுத்தலாம்.

பேதன மூலிகைகள்

1. வட்டத்துத்தி : வட்ட வட்டமான இலைகளையுடைய ஒரு செடி, இது நெருப்பைக் கட்டுப்படுத்துவதில் அபாரமான சக்தியுடையது.

2. செம்பசளை : இது நமது உடலில் உள்ள கோளாறுகளை வேறுபடுத்தி அப்புறப்படுத்த உதவுகிறது.

3. மாவிலங்கு

4. பாதிரி : இவை இரண்டும் உன்மத்தம் ; பைத்தியம் பேய்க்குணம் போன்றவற்றை அப்புறப்படுத்த உதவுகின்றன.

5. கோழியவரை : குட்டிப் பேய்கள் சாத்தான்கள் போன்றவற்றை அவை இருக்கும் இடத்திலிருந்து வெளியேற்ற உதவுகிறது.

6. சீந்தில் கொடி : இது எதிரிகளை அப்புறப்படுத்த உதவுகிறது.

7. புடலங்கொடி : இது ஒரு வேடிக்கையான செயல், உடுத்திருக்கும் துணிமணிகள் உடம்பில் ஒட்டாமல் அவிழ்ந்து ஓடச் செய்யக்கூடியது. கொடியவர்கள் வேண்டாதவர்களை மானபங்கப்படுத்த வேண்டுமென்றால் இதைப் பிரயோகிக்கலாம்.

8. ஆகாசத் தாமரை : என்ன மருந்து கொடுத்தும் குணமாகாமல் நோய் அதிகப்பட்டுக் கொண்டே இருக்கும் பொழுது ஆகாசத் தாமரையை வைத்து பேதன மந்திரத்தை பிரயோகம் செய்வது சட்டென்று நோயைக் கட்டுப்படுத்துவது; அது மேலும் அதிகப்படாமல் தடுக்க உதவுகிறது.

4. மாரணம்

மாரணம் என்றால் அழிப்பது: கொல்வது. எதையழிப்பது என்பதுதான் கேள்விக்குறிய விஷயம். ஒருவன் தனக்கு வேண்டாதவர்களையெல்லாம் மாரணத்தைப் பயன்படுத்திக் கொன்றுவிடுகிறான் என்று வைத்துக்கொண்டால் அவனால் உலகத்திற்கே கெடுதல் அல்லவா உண்டாகும். ஆனால் மிகக் கடுமையான பயிற்சியின் மூலமாகவும் நியம நிஷ்டைகளை அனுசரிப்பதன் மூலமாகவும் அடைந்த ஒரு அபூர்வமான சக்தியை ஒரு அற்ப காரணத்திற்காகவோ அல்லது தன்னுடைய கோபதாபங்களைத் தீர்த்துக் கொள்வதற்கோ பயன்படுத்துவதற்கு யாரும் துணியமாட்டார்கள். தவிர, மாரண மந்திரங்கள் தனக்குள்ளும் வெளியிலும் இருக்கும் தீயசக்திகளை அழிப்பதற்காக மட்டுமே ஏற்பட்டவை.

மாரண மூலிகைகள்

1. நச்சுப்புல்
2. நிர்விஷம்

நச்சுப்புல் என்பது நச்சுத்தன்மையுடைய ஒருவகை சிவப்புப் புல், நிர்விஷம் என்பது ஒருவகைப் புல் செடி. ஆனால் தன் சக்தியால் மற்ற செடி கொடிகள் பொருள்களிலுள்ள விஷத் தன்மையை மாற்றக்கூடியது.

இவை இரண்டும் நமது உடம்பில் உள்ள நச்சுத்தன்மை விஷ நீர்கள் போன்றவற்றை அழிக்க பயன்படுகின்றன.

3. சித்திர மூலம்
4. கருஞ்சூரை

இவை இரண்டும் நோய்களின் சக்தியை அழிக்க உபயோகப்படுத்தப்படுகிறது.

5. அம்மான் பச்சரிசி : இது பூமியின்மேல் தரையோடு தரையாகப் படர்ந்திருக்கும் ஒருவகை மூலிகைச் செடியாகும். இதன் இலையைக் கிள்ளினால் பால் வரும். கசகசாவைப்போல் சிறிய பச்சை விதைகள் நெருக்கமாகக் காய்ந்திருக்கும். பொதுவாக வீட்டுக் கொல்லைகள். குப்பைமேடு, வயற்காடு, சாக்கடை ஓரங்களில் வளர்ந்திருக்கும். இந்த அபூர்வமான மூலிகை கண்ணாடியின் கூர்மையை மழுங்கச் செய்யக்கூடியது.

6. கார்த்திகை கிழங்கு

7. மருதோன்றி : இவை இரண்டும் துர்தேவதைகள் பேய் பிசாசுகள் போன்றவற்றை அழிக்க உதவுகின்றன.

8. நாவி : இது துஷ்ட விலங்குகளை அழிக்க உதவக் கூடியது. மாரண மாந்திரீகத்தை சரியாகப் பயன்படுத்தக் கூடியவர் வசிக்கும் இடத்தில் வெறிநாய்கள் புகுந்தாலும் சுருண்டு விழுந்துவிடும்.

மேற்கூறியவை தவிர சிறியாணங்கை, கிலுகிலுப்பை, குடபத்திரி போன்ற தாவரங்களும் மாரண வேலைகளுக்கு பயன்படுகின்றன. கிலுகிலுப்பைச்செடி காற்றில் அசையும் பொழுது. குழந்தைகள் கிலுகிலுப்பையை ஆட்டுவது போல் ஓசை உண்டாக்கும்.

குடபத்திரி என்பது சீரகச் செடிபோல் காணப்படும் ஒருவகைச் செடி.

தேள் கடித்தவர்களுக்கு வலியை அகற்ற கிலுகிலுப்பை பயன்படுகிறது. குடபத்திரி ருசி தெரியாமல் செய்துவிடும்.

5. மோகனம்

மோகனம் என்பது மயக்குவது. தன்னிடம் மயங்கி தான் சொன்னதைச் செய்யும்படி செய்வது.

பெண்களை மட்டும்தான் மோகம் கொள்ளச் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை, ஓரிடத்தில் வேலை செய்பவர் மேலதிகாரியை மயக்கி வசப்படுத்திக் கொள்ளலாம். தலைவர்கள் பொது ஜனங்களை தங்கள் பேச்சில் மயங்கி கட்டுண்டு கிடக்கும்படிச் செய்யலாம்.

மோகனத்துக்கு உதவும் மூலிகைகள்

1. பொன் ஊமத்தை : *இது பெரும்பாலும் பெண்களை மோகங் கொள்ளச் செய்வதற்காகவே உபயோகப்படுகிறது.*

2. கஞ்சா வேர் : *ஜன வசியத்திற்கும்,*

3. பெண் ஊமத்தை : *உலகமே தன்னைக் கண்டு மயங்கிக் கிடக்கும்படியாக அதாவது தன்னிடத்தில் மயங்கும்படியாகச் செய்வதற்கும் பயன்படும் மூலிகைகள்.*

4. கோரைக் கிழங்கு : *விலங்குகளை மயக்குவதற்கும்*

5. மருள் ஊமத்தை : *தேவதைகளை மயக்குவதற்கும்*

6. ஆலம் விழுது : *அரசர்கள் பிரபுக்கள் அதிகாரிகளை மயக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.*

7. நன்னாரி : *எல்லாவற்றையுமே மயக்கக்கூடியது.*

8. கிராம்பு : *தன் அருகில் இருக்கும் மனிதர்களை மயக்கிவிடக் கூடியது.*

6. வசியம்

ஆகர்ஷணம், மோகனம், வசியம் இவை மூன்றுமே ஒரே மாதிரியான தன்மை உடையவைபோல் தோன்றலாம். ஆனால் இவற்றுக்குள்ள வேறுபாடு பிரயோகம் செய்யும்போதுதான் தெரியவரும். ஆகர்ஷண சக்தி தன்னை நோக்கி இழுக்கிறது. மோகன சக்தி மயங்கிவிடச் செய்கிறது. வசிய சக்தி தனது வசீகரத் தன்மையால்தான் சொன்னதைச் சொல்லி செய்ததைச் செய்யும் தன்மையுடையவர்களாய் மற்றவர்களை மாற்றிவிடுகிறது. வசியம் செய்பவர் மற்றவரை அடிமைப்படுத்தி விடுகிறார் என்று சொல்ல வேண்டும். அதாவது வசியம் செய்பவரின் எண்ணத்திற்கு மாறாக மற்றவரால் எதுவுமே செய்ய முடியாது.

வசியத்திற்கு உபயோகப்படும் மூலிகைகள்

1. சீதேவி செங்கழுநீர்:- *அரசர்களை வசியம் செய்வதற்கு உதவுகிறது. மேலதிகாரிகள் தன்னைவிட உயர்ந்த நிலையில் உள்ளவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.*

2. நில ஊமத்தை :- *பெண்களை வசியம் செய்ய*

3. வெள் எருக்கு:- உலக வசியத்திற்கு

4. வெள்ளை விஷ்ணுகாந்தி:-

5. கருஞ்சம்பை : இவை இரண்டும் ஜன வசீகரத்திற்கு

6. வெள்ளை குன்றி:- மிருக வசியத்திற்கு

7. பொற்றலைக் கையாந்தகரை அல்லது மஞ்சள் கரிசலாங்கண்ணி:- தேவ வசியத்திற்கு

8. செந்நாயுருவி:- பொதுச் சபைகள் திருக்கூட்டங்கள் போன்றவற்றில் மற்றவர்களை வசியம் செய்வதற்கு

மேற்கண்ட மூலிகைகளை வைத்து வசிய மந்திரப் பிரயோகம் செய்பவர் தான் நினைத்தபடி மற்றவர்களை ஆட்டி வைத்துவிடுவார்.

மேலே கூறியவை தவிர தொழுகண்ணி என்றொரு மூலிகை உள்ளது. இதன் அருகில் சென்றால் இரண்டு கைகளையும் கூப்புவதுபோல் இலைகள் மூடிக்கொள்ளும் மிக அபூர்வமான மூலிகை இது. எல்லா இடங்களிலும் காண்பதரிது. மலைப் பகுதிகளில் வெகு அபூர்வமாக காணப்படும் மூலிகை இது. சதுரகிரி, நீலகிரி, பொதிகை, ஆனைமலை முதலிய மலைகளில் அபூர்வமாகக் காணப்படும். இந்த மூலிகை துண்டுபட்ட சதைகளை ஒன்றாகச் சேர்த்துவிடக்கூடிய சக்தி படைத்தது என்பர். பாம்பின் விஷத்தைப் போக்கக் கூடியது. இது பெண்களை வசியம் செய்ய மந்திரப் பிரயோகத்திற்கு உதவுகிறது.

2. வெள்ளருகு உலக வசியத்திற்கும் நாகமல்லி, தேவ வசியத்திற்கும் நாயுருவி பொதுவாக எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவதற்கும் மயூரச்சிகை மற்ற எல்லா வசியங்களுக்கும் உதவுகிறது.

7. வித்து வேடணம்

வித்துவேடணம் என்பது ஒருவரையொருவர் வெறுக்கச் செய்வது. பகை உண்டாக்குவது போன்றவற்றைக் குறிக்கும். எது தனக்கு வேண்டாததோ அது தானாகத் தன்மேல் வெறுப்படைந்து தன்னைவிட்டு ஓடிவிடும்படியாகச் செய்வதற்கு வித்துவேடண மந்திரம் பயன்படுகிறது.

வித்துவேடண மூலிகைகள்

1. கருங்காக்கணம்:- தன்னைவிட சக்தி வாய்ந்தவர்கள், பிரபுக்கள், அரசர்கள் தன் வழியில் குறுக்கிடாமல் செய்ய.

2. வெள்ளைக் காக்கணம்:- *தேவதைகளைப் பிரிக்க.*

3. திருகு கள்ளி:- *பூதகணங்களை விரட்ட,*

4. ஆடுதின்னாப் பாளை:- *பேய் பிசாசுகள் வெளிப்பட்டு அகல.*

5. பூனைக்காலி:- *உடலிலுள்ள பூச்சிப் புழுக்கள் மற்றபடி சுற்றுப்புறங்களிலுள்ள கிருமிகளையும் அழிக்க.*

6. ஏறண்டம்:- *உன்மத்தம், வெறித்தனம் போன்றவற்றை அழிக்க.*

7. கீழாநெல்லி:- *மறைந்துள்ள பொருட்களை வெளிப்படுத்த.*

8. சிற்றாமணக்கு:- *மேலும் மேலும் அதிக உணவு உட்கொள்ளச் செய்ய. இந்த வித்துவேடண மூலிகைகள் மந்திர விதிப்படி உபயோகிக்கப்படுகின்றன. இவை தவிர செங்கத்தாரி என்ற மூலிகை மனிதர்களுக்குள் பகை; கலகம் உண்டாகவும், காட்டாமணக்கு பேய் பிசாசு பிடித்திருப்பவர்களிடமிருந்து அவற்றை அப்புறப்படுத்தவும் மாந்திரீகப் பிரயோகம் செய்ய உதவுகின்றன.*

8. தம்பனம்

ஸ்தம்பனம் என்பது ஒன்றைக் கட்டுப்படுத்தி நிற்கச் செய்வது. இதில் பாய்ந்து வரும் அம்பை அப்படியே நிற்கச் செய்வதுகூட அடங்கும். ஸ்தம்பன மந்திரத்தால் காற்றையும் அசையாமல் நிறுத்தலாம். நீரை ஸ்தம்பிக்கச் செய்து அதன் மேல் உட்காரலாம்; நடக்கலாம். நீர்த்தன்மையுடைய பொருள்களை கட்டியாகச் செய்துவிடலாம்.

ஸ்தம்பனத்திற்கு உதவும் மூலிகைகள்

1. கட்டுக்கொடி: *ஜலஸ்தம்பனத்திற்கு உதவுகிறது. ஸ்தம்பனம் செய்பவர் தண்ணீர் மேல் உட்காரலாம். நீர் மேல் நடக்கலாம்.*

2. பால்புரண்டி : *இது பெண்களிடம் பால் சுரக்காமல் செய்துவிடக் கூடியது.*

3. பாட்டை: *வயிற்றுப் போக்கை நிறுத்திவிடக் கூடியது.*

4. நீர்முள்ளி : *நீர் வடியும் நோய்களில் நீர் வடிதலை நிறுத்தி வீக்கத்தைக் குறைக்கக் கூடியது.*

5. நத்தைச் சூரி : *கற்களையும் மாவு போல் செய்து விடக் கூடியது.*

6. சத்திச் சாரணை : குண்டுகள் வெடிக்காமல் செய்யவும், ஆயுதங்கள் அப்படியே பயனற்றவையாக நின்றுவிடவும் செய்யக்கூடியது.

7. பூமி சர்க்கரைக் கிழங்கு : திரவங்களை திடப்பொருளாக செய்துவிடக் கூடியது.

8. குதிரைவாலி : கருப்பையில் இருக்கும் குழந்தையை வளராமல் செய்துவிடக் கூடியது.

மேற்கூறியதைத் தவிர நீலிவேர், ஆடாதோடை, குப்பைமேனி, தகரைவேர் ஆகிய மூலிகைகளும் தம்பன மந்திரத்திற்கு உபயோகப்படுகின்றன.

குப்பைமேனி வேரை வைத்துத் தம்பன மந்திரப் பிரயோகம் செய்யும்போது கிரகங்களின் சக்தியும் அணுகாதபடி செய்யலாம். ஆடாதோடை, தகரை வேர் இரண்டும் பாய்ந்து வரும் விலங்குகளையும் ஸ்தம்பித்து நின்றுவிடச் செய்துவிடக் கூடியவை.

அஷ்டதுர்க்கை மூலி

மூலிகைகளில் முருங்கைவேர் மற்றவர்களுக்கு மூளைக் கோளாறு அல்லது பைத்தியம்பிடிக்கச் செய்ய உதவுகின்றது.

முடக்கத்தான் வேர் : கை கால் வராமல் போகும்படி செய்யவும், மூக்கரைச் சாரணை உடம்பில் பிடிப்புக்கள் ஏற்படச் செய்யவும் உதவுகிறது.

இவை சமுதாய விரோதிகள் பகைவர்கள் மேலேயே பிரயோகம் செய்யப்பட வேண்டும்.

முகூட்டை வேர்:- என்பது ஓர் அபூர்வமான மூலிகை. இது ஒரு படையையே தடுத்து நிறுத்திவிடும்.

முக்காவேளை:- வனவிலங்குகளையும் கொடிய மிருகங்களையும். அடித்து விரட்டக் கூடியது.

முசலைச் செடி : மற்றவர்களால் ஏவப்படும் மாந்திரீகம், பில்லி, சூனியம் முதலானவை தன்னை அணுகாதபடி தடுத்து நிறுத்தக் கூடியது.

மேலே கூறிய மூலிகைகளெல்லாம் சாதாரணமாக மருந்துச் சரக்குகளாக பயன்படுத்தப்படுகின்றன. ஆயினும், அவை மந்திரப் பிரயோகம் செய்து மாந்திரீகம் செய்யவும் உதவுகின்றன என்பதை மந்திர சாஸ்திரங்களின் மூலம் அறிகிறோம்.

மாந்திரீகத்திற்கு மூலிகைகள் மட்டுமே உதவுகின்றன என்பதில்லை, கல், மண், உலோகம், ரத்தினம் முதலான தாது வர்க்கங்களிலிருந்தும் பிராணிகளிலிருந்தும் கிடைக்கும் பொருள்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

ஒட்டிய முனிவர் அருளிச்செய்த

ஒட்டியம்

அருஞ்சொற் பொருள்

6. ஆவின் புல்லுருவி - கோரோசனை

7. ஆனை வணங்கி - ஒரு வகைச் செடி, தேள் கொடுக்கி என்றும் பெயர். விஷக்கடிகளுக்கு நீரில் கரைத்துக் கொடுப்பர். பெரு நெருஞ்சில் என்றும் சொல்வர்.

நிலப்பனை வேர் - நிலப்பனையின் வேர். நிலப்பனை என்பது ஒருவகைச் செடி, இதன் கிழங்கு நல்ல மருந்தாகப் பயன்படும்.

தொட்டி - காஞ்சொறி, தொட்டால் சொரியன் செடி, தேளைப்போல் இலையுடையது. இந்த இலையைத் தொட்டால் அரிப்பு உண்டாகும்.

பூனை வணங்கி - குப்பைமேனி, பூனை வணங்கும் செடி.

சுழலாவரை - சுழலாவரை, பொன்னாவிரை

பொற்றலையான் - பொற்றலைக் கையான் தகரை, மஞ்சள் கரிசலாங்கண்ணி

சிவன்மூலி - சிவனார் வேம்பு, ஒருவகைப் படரும் கொடி. மணற்பாங்கான இடத்தில் பல இடங்களிலும் வளரக்கூடியது. இலைகள் மிகவும் சிறியது. பூக்கள் சிவப்பு ஊதா நிறங்களில் காணப்படும்.

தானை வணங்கி -

முசுட்டை - ஒருவகைக் கொடி மருந்துப்பூடு

அருஞ்சொற் பொருள்

8. செந்நாயுருவி - நாயுருவி; எங்கும் காணக்கூடிய ஒருவகைப் பூண்டு, சிவப்பு நாயுருவி. இது ஒரு கற்பமூலிகை. காரீயத்தினை செந்தூரமாக்கக் கூடியது.

சிவந்த கஞ்சா - கஞ்சாச் செடியில் சிவப்பு நிறமுடையது.

செம்முள்ளி - சிவப்பு முள்ளிச் செடி

செங்குவளை - சிவந்த நிறமுடைய குவளை

மதிமயக்கி - கொன்றை, திகைப்பூடு

வழிமரித்தான் -

9. மதியை மசக்கி, மதிமயங்கி - கொன்றை

மறைமசக்கி - மறைமூலி பசளை

10. விஷ்ணுகிரந்தி - விஷ்ணுகாந்தி, விஷ்ணுகரந்தை, தரையில் படரும் ஒரு வகைக் கொடிப் பூண்டு, நீலம் வெண்மை நிறங்களில் பூக்கக்கூடியது. கபத்தை அறுக்கக் கூடியது.

காடுகட்டி -

விஷங்கொல்லி - நஞ்சறுப்பான் ஒரு வகைக் கொடி; இக்கொடி மணல், களிமண் தரைகளில் பயிராகும்; வங்காளத்தில் அதிகமாகப் பயிராகின்றது; மருந்துக் கடைகளில் கிடைக்கும்; கீறிப்பிள்ளை இதில் புரண்டு எழும்

முத்தான் -

மின்னி - கருத்தாக்கணம்; ஒருவகைப் பளபளக்கும் செடி

சங்கம் வித்து - சங்கஞ்செடியின் வித்து.

11. நிலம்புரண்டி - இது ஒரு வகை மாந்திரீக மூலிகை; மற்ற செடிகளைப்போல் படர்ந்திருப்பினும் மனிதர் வாடை பட்டவுடன் மண்ணிற்குள் இறங்கி மறைந்துவிடும். தேத்தான் கொட்டையை கையில் வைத்துக்கொண்டு சென்றால் இந்தச் செடியுள்ள இடத்தில் கொட்டை தானாக வெடித்துவிடும். அப்பொழுது மூலிகை கண்ணுக்குத் தெரியும் பின்னர் மறையாது.

நீலி - 1 அவுரிச் செடி, 2 நீலநொச்சி, 3 நீல மருதோன்றி போன்றவற்றிற்கு இப்பெயர் உண்டு.

அருஞ்சொற் பொருள்

ஆடையொட்டி - ஒட்டுப்புல். கரும்பச்சை நிறமும் சிறிய பூக்களையுமுடைய ஒரு பூண்டு. இது விசாலமாக பரவக்கூடியது; அருகில் செல்பவர்களின் ஆடைகளில் ஒட்டிக் கொள்வதனால் இப்பெயர். ஒருவகைச் செடி. இதன் இலை சொர சொரப்பாக இருக்கும். அருகில் செல்பவர் ஆடைகளில் ஒட்டிக்கொள்ளும். மேல் பக்கம் சொர சொரப்பாக உள்ளது ஆண் செடி, அடிப்பக்கம் சொர சொரப்பாக உள்ளது பெண் செடி.

13. நின்றுசிணுங்கி - சிறியா நங்கைச் செடி, தண்ணீர் கசிந்து கொண்டு இருக்கும் ஒரு வகைச் செடி. இதற்கு அழுகண்ணி என்றும் பெயருண்டு.

14. கூத்தங் குதும்பை - மூக்குத்திப்பூடு, மூக்குத்திக்கொடி இதற்குக் காட்டுச் செவ்வந்தி என்றும் பெயர்.

15. அரைக்காம்பல் - அரக்காம்பல்; சிவப்பு சிறத்தில் பூப்பூக்கும்.

ஆம்பல் - ஆம்பல் என்பது நீரில் புதர்போல் வளரும் செடி.

அல்லி - இரவில் பூக்கும் ஒருவகை நீர்ச்செடி.

ஆம்பல் என்ற பெயரும் உண்டு. வெள்ளை, சிவப்பு, நீலம் முதலிய நிறங்களில் பூக்கும் வகைகள் உண்டு. சிற்றலரி; செங்கழுநீர் என்ற வகைகளும் உண்டு. பொதுவாக அல்லி என்றால் வெள்ளல்லியையே குறிக்கும்.

அதிமதுரம் - ஒரு கொடியின் வேர். சாதாரணமாக நாட்டு மருந்துக் கடைகளில் விற்கப்படுகின்றது.

17. காமரூபி - பச்சோத்தி

கொவ்வை - கோவை; கோவைக் கொடி; வேலிகளில் வளரக்கூடியது. இதன் பூ வெள்ளை, பழம் சிவப்பு, இதன் இலைச் சாற்றினை விஷக்கடிக்குப் பூசலாம். இதில், 1 நல்லகோவை 2 பெருங்கோவை 3. இராமகோவை 4 கருட கோவை 5 கார்க்கோவை 6 கற்கோவை 7 ஐவிரலிக் கோவை 8 மணற்கோவை 9 வரிக்கோவை 10 செங்கோவை அல்லது குங்குமக் கோவை 11 தித்திப்புக் கோவை 12 கொல்லன் கோவை (ஆகாச கருடன்கோவை) 13 அப்பைக் கோவை 14 நாமக்கோவை என்ற பல வகைகள் உண்டு.

மானைத் தேடிதான் சென்றான் -

அருஞ்சொற் பொருள்

18. ஆலிவேர் - ஆளிவேர்; ஒரு வகைக் கீரைச்செடி; இது தனிப்பெயர் நீர்க்கொணலி - நீர்க்குளரி - கல்லாரைச் செடி; நீர்ச்சேம்பு; மோகச்சாலை

மங்கிலி - மங்கலி, சீதேவிச் செங்கழுநீர்

வீழி - ஒரு வகைச்செடி; மரம், விழுதி என்பதும் இதுவே. இதன் கிழங்கு மற்ற உலோகங்களை வெள்ளியாக்கக்கூடியது; இந்தக் கிழங்கை அரைத்துக் குகை செய்து அதில் பாதரசத்தினை விட்டு இரும்புக் கரண்டியில் வைத்து அடுப்பில் ஏற்றி எரிக்கும்பொழுது மணல் காடை நெய்யை ஊட்டினால் இரசம் மணியாகிவிடும்; இந்த மணியை வாயில் வைத்துக்கொண்டு கவன சஞ்சாரம் செய்யலாம். இதன் இலையை வாயில் அடக்கிக்கொண்டு எவ்வளவு தூரம் ஓடினாலும் களைப்பு ஏற்படாது.

கோடகசாலை - கற்பூரவல்லி; கற்பூரவல்லி ஒரு வகைச் சிறிய பூண்டுச்செடி. இலைகள் வட்டமாகவும், கனமாகவும், இருக்கும். இரண்டு பக்கங்களும் சொர சொரப்பாக இருக்கும். மலைப் பிளவுகளில் இயற்கையாக வளரும். தொட்டியில் வைத்தும் வளர்க்கலாம். குழந்தைகளின் மார்ச்சளி, இருமல் ஆகியவற்றினைப் போக்கக்கூடியது. வயிற்று வலியையும் போக்கும். இலையைக் கீரையாகச் சமைத்துச் , சாப்பிடலாம்; இதனால் கல்லடைப்பு நீங்கும்.

19. முத்தக்காசு - கோரைக்கிழங்கு. அஷ்ட மூலங்களில் ஒன்று எட்டு வகை மூல மருந்துகளில் ஒன்று; சுரத்தினைப் போக்கும்.

20. மருதன் வேர் - மருத மரத்தின் வேர்

வெண்மத்தன் வேர் - ஊமத்தஞ் செடியின் வேர்

மருள்மத்தன் சேர் - மருள் ஊமத்தையின் வேர்

21. சீதாதேவிச் செங்கழுநீர் - நெய்ச் சிட்டி

துடரி - தொடரி. ஒருவகை முட்செடி இதனை இண்டஞ் செடி எனவும் கூறுவர்.

சிறுபுன்னை - சுரபுன்னை; இது ஒரு வகைச் சிறிய மரம். இலைச் கொழுந்து சிவப்பு. முற்றியதும் கரும்பச்சை ஆகிவிடும். பூ வெண்மை நிறம்.

22. மூவிலைக் குருந்து - பொதிகை மலைச் சாரலில் முளைப்பதாகச் சொல்லப்படும் ஒருவகைக் குருந்தமரம். தாமிரபரணி நதிக்கரையில் அதிகமாகக் காணப்படும்.

அருஞ்சொற் பொருள்

குருந்தம் - குருந்த மரம்.

மஞ்சள் மல்லிகை - மஞ்சள் செம்முள்ளி.

கொழிஞ்சி - கிச்சிலி

கொள்ளுக்காய் வேளை - புளியிலையைப் போன்ற இலைகள், சிறிய ஊதா நிறப்பூக்கள் உடையது. இதன்வேர் கசக்கும். கஷாயம் குன்மத்தைப் போக்கும்.

குல்லை - கஞ்சா, துளசி

நொச்சி - ஒருவகை சிறிய மரம்; நீண்ட காம்புடன் கூடிய இலைகள் ஒவ்வொரு இலையிலும் மூன்று ஐந்து பிரிவுகள். பூவின் நிறம் நீலம் புறவிதழ் ஐந்துபிரிவாக இருக்கும் வருஷம் முழுவதும் பூக்கக்கூடியது. கட்டிகளைக் கரைத்து மாசுகளை வெளிப்படுத்துவதில் இதன்இலைக்கு நிகரானது வேறு ஒன்றும் இல்லை. வாத நோயைப் போக்கக்கூடியது. 1 வெண்நொச்சி, 2. கருநொச்சி 3. நீர்நொச்சி. 4. சிறு நொச்சி 5. காட்டு நொச்சி, 6. மயிலடி நொச்சி, 7. மலை நொச்சி, 8. மூலிலை நொச்சி, 9. ஆற்று நொச்சி, 10. வயல் நொச்சி, 11. ஐந்திலை நொச்சி எனப் பலவகைகள் உண்டு.

நொச்சி என்று சதகுப்பையையும் சொல்வதுண்டு. இது முக்கியமான பதினெட்டு வகை மூலிகைகளுள் ஒன்று ஆகும். விரலிவேர் - ஒரு வகைக் கொடியின் வேர், மஞ்சள்.

24. குன்றிமணி - குன்றிமணிச் செடியின் விதை. இச் செடி வேலி ஓரம், பாழ்மனைகள், புதர்கள் போன்ற இடங்களில் சாதாரணமாகக் காணப்படும். நிறையப் பூப்பூக்கும். பூக்கள் ஊதா அல்லது சிவப்பு நிறமாக இருக்கும். காய்களில் ஐந்து ஆறு கொட்டைகள் இருக்கும். 1 சிவப்பில் கரும்புள்ளி. 2. முழுக்கருப்பில் வெண்புள்ளி 3. முழுவெள்ளை 4. முழு சிவப்பு. 5. ஊதா, 6. மஞ்சள் இப்படி பல வர்ணங்களில் கொட்டைகளைப் பார்க்கலாம். இலை, காய்; விதை, வேர் எல்லாப் பாகங்களும் மருந்தாகப் பயன்படும்.

காரி - ஆவிரை, கண்டங்கத்தரி

சூலி - சதுரக்கள்ளி

நாவடக்கி - மருக்காரை நா எழாமல் செய்யும்

புரங்கொல்லி -

சுவரில் ஆடை -

நிலத்தம்மி -

25; விஷ்ணுகிரந்தி மூலம் - விஷ்ணு கிரந்திச் செடியின் வேர்.

விளாம்பிசின் - விளாமரத்தின் பிசின்

மத்தன் - ஊமத்தன்

மருள்மத்தன் வித்து - மருள் ஊமத்தையின் விதை

26. சூரிவேர் - நத்தைச் சூரியின் வேர்

காரியின் நிணம் - காக்கையின் மாமிசம்

துடையிற் சீலை -

கதலிவேர் - வாழையின் தண்டு

பேயன் தண்டு - பேயன் வாழை மரத்தண்டு

சூத்திரமூலி -

27. உருமலம் -

உணரிதன் மூலம் -

இருள்வலி - இருட்டைப் போக்குபவன் சூரியன்

இருள்வலி மூலி - சூரியகாந்தியின் வேராக இருக்கலாம்

இருவரில் ஒருவன் வேர் -

28. நீர்மேல் நெருப்பு :- 1 கல்லுருவி, 2. ஆகாசத் தாமரை, 3. கொட்டைப்பாசி

வன்னிக்கட்டு -

வன்னி - நெருப்பு, இலிங்கம், வன்னிமரம்

பார்மேல் செத்தான் வழியாளி -

கடலடைத்தான் - அபினி, கஞ்சா

சுளத்தி வளத்தி -

அருஞ்சொற் பொருள்

29. சங்கன்வேர் - சங்கஞ் செடியின் வேர்

குமரிவேர் - கற்றாழைவேர்

மேனி - குப்பைமேனி

வெள்ளைக் காக்கன் - வெள்ளைக் காக்கணம்

செல்வகத்தி - சிவப்பு அகத்திமரம்

செங்கொடி - சிவப்பு சித்திர மூலம்

வட்டத்துத்தி - பொன்முசுட்டை

மங்கை - கற்றாழை

வேலி - வேலிப்பருத்தி

சூனி, சூளி - வெற்றிலை

30. கொத்தான் - முடக்கொத்தான்

கொளிஞ்சி - கொழிஞ்சி

நிலவாகை - நிலத்தில் படரும் வாகை

31. ஆவட்டி - ஆவட்டை ஓர்பூடு

முகமினுக்கி -

நாகவல்லி - 1 வெற்றிலைக் கொடி, 2. ஓரிதழ்த் தாமரை, 3. பாம்புக் கொடி, 4. கீரிபுரண்டான்

செவரொட்டி - சுவரொட்டி - சுவர் முள்ளங்கி

33. பாம்புகண்ணி - சங்கங்குப்பி, ஒருவகை செடி

சாத்திரபேதி - தண்ணீர்விட்டான்

நடனசூரி -

இருவரை ஒட்டி வைத்தான் -

விளையும் - அதிவிடையம்

அருஞ்சொற் பொருள்

34. நரிமிரட்டி - கிலுகிலுப்பைச் செடி

இருவர்தனை மிரட்டி -

35. மான்செவி - 1. மானின் செவிகளைப் போலிருக்கும் ஓர் வகை இலைக்கள்ளி. 2. நாக்கிப் பூடு

அர முடித்தான் - அரமுறித்தான். ஒருவகைச் செடி அரமுறித்தான் என்பதுதான் சரி இரும்பை முறிக்கக் கூடிய தன்மை உடையது.

36. அரமுறி - அரமுறித்தான்

குமறன் விட்டை

37. ஆலின் மேல் பள்ளி கொண்டோன் - ஆலிலைத் துயின்றோன் - காய்ச்சற் பாஷாணம்

அனலிவேர் -

மாவிலிங்கன் வேர் - மாவிலிங்க மரத்தின்வேர், பஞ்ச வில்வங்களில் ஒன்று ஆண், பெண், அலி என்று இதில் மூன்று வகை உண்டு. ஆண்மரம் வெள்ளைப்பட்டை உடையது. பெண்மரம் மஞ்சள் பட்டை உடையது அலிமரம் முட்கள் இல்லாதது பூசைக்கு உதவாது.

38. கௌதும்பை - கவிழ்தும்பை, பூக்கவிழ்ந்துள்ள ஒருவகைத் தும்பைச்செடி.' தாயைக் கொன்றான் - நண்டு

39. நாற்கரந்தை - நாறு கரத்தை - கொட்டைக் கரந்தை - மதி மூலி -

சித்திர மூலம் - கொடிவேலி

குளவிந்தம் - கஸ்தூரி மஞ்சள்

41. அந்தணன் கொன்றை - ஒருவகைக் கொன்றை.

43 நீர்முள்ளி - ஒரு வகை முட்செடி, அடித்தண்டு நேராகவும், நாற்கோணமாகவும்; இலைகள் நீளமாய் நேர் நேராகவும் இருக்கும். நீலம் அல்லது ஊதா நிற மலர்கள் பூக்கும். ஆடி முதல் தை வரை இது பூக்கும் காலமாகும். மலையாளம், வங்காளம், முதலான நீர்வளம் மிக்க நாடுகளில் நெல்வயல்கள், சூளம், குட்டைகளின் அருகிலும் மற்றும் ஈரமுள்ள இடங்களிலும் முளைக்கும். நீர், நீர்த்தாரை சம்பந்தமான நோய்களுக்கு

நல்ல மருந்தாகும். இதில் மூன்று வகைகள் உண்டு. 1 வெள்ளை நீர்முள்ளி 2. ஊதா நீர்முள்ளி 3. பேய்நீர்முள்ளி. கொட்டம் - கோஷ்டம்

மங்களதாரம் -

45. வண்ணை -

புன்னை - ஒருவகை மரம்

செத்தார் மூலி -

கருங்கண்ணி - கருப்புக் கரிசலாலங்கண்ணி

நற்றாமரை நூல் - தாமரை நூல்

நாயுண் கொண்டான் -

46. காகிலை - விளாமரத்தின் இலை

கருத்தமூலி - கருப்பு நிறமான மூலிகை

48. சித்திர மூலி - கொடிவேலி இது பல வகைப்படும். சிவப்பு, வெள்ளை, கருப்பு, நீலம் என்ற வகைகளைத் தவிர வலிய கொடிவேலி என்றும் சீமைச் சித்திரமூலம் என்றும் நிலப்பனைக்கிழங்கு. காட்டாமணக்கு என்றும் கூறப்படும்.

49. பூனைக்காலி -பூனைக் காஞ்சுரை. வயிற்றில் உள்ள கிருமிகளையும், திமிர்ப் பூச்சிகளையும் வெளிப்படுத்த உதவும் ஒரு வகைச் செடி

செங்கத்தாரி - 1 மயிலடிக் குருந்து - ஒரு வகைக் குருந்த மரம். 2 சுருள்பட்டை - ஒரு வகை முட்கொடி.

இருவகை ஒட்டி - 1 சுவரொட்டி 2 தொட்டால் ஒட்டி என்ற இரண்டு வகை ஒட்டி.

தொட்டி - குறுந்தொட்டி

தொட்டாச்சொறியன் - கையில் தொட்டால் அரிப்பை உண்டாக்கும் ஒரு செடி (காஞ்சுரை)

50. கருங்காக்கன் - காக்கரட்டான் செடியின் கருப்பு வகை. நீலம், கருப்பு, வெள்ளை நிறங்களில் பூப்பூக்கும் கொடி வகைகள் உண்டு இவை தவிர இரட்டைக் காக்கணம் என்ற வகையும் உண்டு. இதன்பூ சங்கைப்போல் இருப்பதால் "சங்கு புட்பச் செடி" என்ற பெயரும் உண்டு.

அருஞ்சொற் பொருள்

"கருவிளை" என்ற பெயரும் உண்டு இவற்றில் வெண்ணிறப் பூப்பூக்கும் செடியே சிறந்தது.

திருகு கள்ளி - 1. இலையில்லாமல் கொம்பு கொம்பாக முளைக்கும் கள்ளிச்செடி 2. பாச்சான் செடி

சோரி - 1. கொடிக்கள்ளி 2. சிறு செருப்படை

51. சீவனி - 1. ஆடுதின்னாப் பாளை, 2. மந்தாரச் சீலை, 3. வெட்பாலை.

54. பாதிரிமரம், அடிமரம் பருத்து உயரமாய் வளரும் பெருமரம். வாசனையுடைய மஞ்சள் நிறப்பூக்கள் பூவைத் தண்ணீரில் அமிழ்த்தினால் அதிக வாசனை தரும் இதன் பூ வசியத்திற்கு உதவும்.

செம்பை - ஒரு சிறிய மரம். முள் இல்லாதது, இலைகள் காய்கள் நீளம் நீளமாக இருக்கும். பூக்கள் மஞ்சள் நிறம். விதைகள் நடுவே சுருங்கி இருக்கும்.

நிலத்தி நாகம் - பூநாகம் மண்புழு

55. தலைச்சுருளி - சீந்தில், பெருமருந்துப்பூடு, ஈசுவரமூலி

தலைச்சுருளி வள்ளி - கருடக்கொடி

சத்திச்சாரணை - மூக்கரட்டை இதனால் காரீயம் பஸ்பமாகும்

நீரின் மேல் நெருப்பு - 1. கல்லுருவி. 2. கொட்டை பாசி, 3. வழலை, 4. ஓர் பச்சிலை.

இதனை அரைத்து அரையாப்பு, படை முதலிய தோல் வியாதிகளுக்குப் பூசுவார்கள். இது வயல்களில் வளரும் சிறிய செடி இலைகள் உமி அளவாய் சின்னஞ்சிறியவையாய் இருக்கும். மகாவாதம் திமிர்வாதம் போன்ற நோய்களைப் போக்கும்.

செம்பூலா -

பூலா - புல்லாத்தி எனப்படும் ஒரு வகைச் செடி. வெட்பூலா கரும்பூலா செம்பூலா வறட்பூலா, நீர்ப்பூலா, பேய்ப்பூலா எனப் பல வகைப்படும். கிச்சிலிக்கிழங்கும் இதன் இனத்தினைச் சேர்ந்ததே. இதன் கிழங்கு பூலாங்கிழங்கு என்ற பெயரால் பரவலாக உபயோகிக்கப் படுகின்றது.

56. விச்சு வெட்டி -

உள்ளொட்டி -

60 தொவி வாக ஸப்பை - இது தொலியாக லப்பை என்ற சொல்லாக இருக்கலாம்.

தொலியாக லப்பை - தொலியா கரம்பை - நத்தைச் சூரி

தொட்டால் வாடி - தொட்டால் சுருங்கி, முட்கள் உடைய செடி சிறிய இலைகள். தொட்டவுடன் மூடிக் கொள்ளும். இதன் வேரில் கடுக்காய்ச் சத்து இருப்பதால் மை செய்ய உதவும். வேர் கஷாயம் கல்லடைப்பை நீக்கும். இலைகள், வேர்கள் மூலம் பவுத்திரம் போன்ற நோய்களைக் குணப்படுத்தும். வசியம் செய்ய உதவும். வாத நோயைப் போக்கும். வேர்க் கஷாயம் சிறுநீர் சம்பந்தப்பட்ட நோய்களைப் போக்கும்.

62. நெடுவாலன் - குரங்கு

பழிபண்ணி

தலையில் ஆடி -

தட்டான் கன்னி -

63. கோழியாவரை - வாளவரை. வாள் போன்று நீண்டதாக இருக்கும் அவரைக்காய்ச் செடி.

வலிமுட்டை -

காஞ்சுரை - உலர்ந்த சுரைக்காய், சுரைக்குடுக்கை

64. காச்சான் பாளை -

பெருந்தும்பை - தும்பையின் ஒரு வகை

65. ஓதமடையன் -

குடியணைத்தான் -

காந்தள் - கார்த்திகைப்பூ செங்காந்தள், வெண் காந்தள், கருங்காந்தள், சிறுகாந்தள்,. நரிக்காந்தள், காய்க்காந்தள் என பலவகைப்படும்.

66. இசங்கு - சங்கங் குப்பிச் செடி

அருஞ்சொற் பொருள்

எட்டி - ஒரு வகை மரம் நடுத்தர உயரமுடையது. இலைகள் மிருதுவாக பளபளப்பாக இருக்கும். இலையின் நடுவில் மூன்று அல்லது ஐந்து நரம்புகள் காணப்படும். வெளிர் பச்சையான சிறிய பூக்கள். திருவனந்தபுரம் கொர நாட்டுக் காடுகளில் அதிகமாக விளைகின்றது. மரப்பட்டை சாம்பல் நிறம். இதன் எல்லாப் பாகங்களும் கசப்பானவை. இதன் கொட்டையை மிகச்சிறிய அளவில் இருந்து படிப்படியாக உயர்த்தி ஒரு முழுக்கொட்டை வரை சாப்பிட்டு பழக்கப்படுத்திக் கொண்டவர்களுக்கு எவ்வகைப் பாம்பு கடித்தாலும் விஷம் ஏறாது.

முசுட்டை - ஒருவகை மருந்துக் கொடி.

கழுகொம்பு -

பதிய வைத்தான்

விட்டு ஆட்டி -

67. பூதம் தனை அடைத்தான் -

68. உத்தமத்தாளி - 1 வேலிப்பருத்தி, 2. உத்தாமணி - ஒருவகைச் செடி இலையை ஒடித்தால் பால் வடியும்; சிறிய வெற்றிலைபோல் வட்ட வடிவமாயிருக்கும்

நங்கிலி -

71. ஏழு முள்ளு -

குத்தான் -

மத்தான் -

தலை விரித்தான் - 1 ஆற்றுத் தும்மட்டிக்காய். 2. பேய்க் கொம்மட்டி, 3. சாரணை, 4 செருப்படை

சந்தியில் நின்றுகொண்டாள் -

ஆடு வெட்டி -

72. கொங்கன் முளை -

அருணி -

73. நஞ்சு - ஒருவகை மரம்

புங்கு - ஒருவகை மரம்

ஐங்காயம் - i. 1. பூண்டு, 2. கடுகு, 3. சுக்கு 4. பெருங்காயம் 5. மிளகு சேர்ந்த மருந்து.

ii. 1. மஞ்சள், 2. கடுகு; 3. பூண்டு, 4. காயம், 5. வெந்தயம் சேர்ந்த மருந்து.

iii ஐந்துவகை பாஷாணங்களைக் குறிக்கும் பரிபாஷை அவை 1. தாரம். 2. லிங்கம். 3. கௌரி 4. வீரம், 5. வெள்ளை

iv தலைப் பிள்ளைக் கருவைக் கொண்டு செய்த மெழுகு.

74; ஐங்காரம் - 1. வெண்காரம், 2. சீனாக்காரம் 3. சவர்க்காரம், 4. காடிக்காரம், 5. அப்பளாக்காரம் என்று ஐவகைக் காரங்கள் சேர்ந்த மருந்து

கச்சக் கடுகு -

75. கொல்லுமூலி -

கும்மட்டி

கல்நெருக்கி -

கண்டால் மயக்கி -

பிண மயக்கி -

சொல் மயக்கி -

76. புலால் நாரி -

மான் துரத்தி -

அழிஞ்சி - அழிஞ்சில் ஒரு வகைமரம். இதற்கு ஐங்கோலம் எனவும். அங்கோலம் எனவும் பெயர். இதன் வேரின் சாறு நல்ல கிருமி நாசினி, பாம்புக் கடிக்கும், நாய்க் கடிக்கும் உபயோகிக்கப்படும்.

தோட்டி - அழகு. செங்காந்தன், நெல்லி

கார்த்தகை மூலி - கார்த்திகைக் கிழங்கு, கலப்பைக் கிழங்கு, கண்நோய்க் கிழங்கு, காந்தள், அக்கினிச்சிலம். தலைச்சுருளி, கோடல், வெண்தோன்றி, தண்ணீர்க்கிழங்கு எனப் பல பெயர்கள் உண்டு. பூக்கள் நீளமாகவும், திருகிக் கொண்டும் இருக்கும். கிழங்கு விரல் பருமன் உடையதாய் மூன்று முதல் ஐந்து அங்குலம் நீளம் இருக்கும்.

மணல்வெளிகளிலும் சதுப்பு நிலங்களிலும் விளையும். மேல்தோல் சுருக்கங்களுடன் காணப்படும். வெளிப்பக்கம் கபில நிறமாகவும், உட்பக்கப் வெண்மையாகவும் இருக்கும்.

ஏனை - மலாங்கு மீன்

77. மயிர்மாணிக்கம் - கோரோசனை, அழகுக்கொடி

சபை மருட்டி - சபை அஞ்சும்படி செய்பவன்.

தேவாங்கு - இளைத்த உடம்புள்ள பிராணி, குரங்கு இனமாக கருதப்படுகின்றது. காடுகளில் மரக்கிளைகளில் வசிக்கும். மிகச் சிறிய உருவமுடையது. உடம்பில் மிருதுவான அடர்த்தியான உரோமம் உடையது. வளைந்த மூக்குடையது. வாயும் மூக்கும் நீண்டு நரியைப் போல் தோற்றமளிக்கும். இரவில் மட்டுமே வெளிப்பட்டு உலாவக் கூடியது. இதன் ஒவ்வொரு அங்கமும் வைத்தியத்திலும் மாந்திரீகத்திலும் பயன்படுகின்றன. இதில் பல வகைகள் உண்டு.

78. தெள்ளி மருட்டி -

பகல் மருட்டி -

80. தண்ணீர்தேற்றி - தேத்தாங்கொட்டை

83. கோசம் - அண்டம், முட்டை, மூக்கிரட்டை புரணி, அல்லது தோல் ஓடு, குடற்குழி.

நரியொட்டி -

84. தக்காளி பிள்ளை - தக்காளிபிள்ளை - பிள்ளை பூச்சி

நாகனழைத்தாள் வேர் -

வன்புதக் காட்டு வேர் -

85. ஓரிலை - சிற்றாமல்லி

மானைக்கட்டி -

கழுகுநீர் விலக்கி -

துங்கன் -

87. நாகக்கல் - சிலாநயகம், கருடக்கல்

அருஞ்சொற் பொருள்

இருளன்மூலி - உருவத்தை மாற்றுமோர் விதமூலிகை

91. வசியத்திற்கு - ஞாயிற்றுக் கிழமை

மோகனத்திற்கு - திங்கட்கிழமை

ஏடணை, பேதம் இரண்டிற்கும் - செவ்வாய்க்கிழமை

தம்பனத்திற்கு - புதன் கிழமை

உச்சாடனத்திற்கு - வியாழக்கிழமை

ஆக்ருஷணத்திற்கு - வெள்ளிக்கிழமை

மாரணத்திற்கு - சனிக்கிழமை

93. வசியத்திற்கு - கிழக்கு

மாரணத்திற்கு - தெற்கு

உச்சாடனத்திற்கு - மேற்கு

பேதனத்திற்கு - வடக்கு

ஏடணைக்கு - கன்னி (தென்மேற்கு)

தம்பனத்திற்கு - தென்கிழக்கு

ஆக்ருஷணத்திற்கு - வாயு (வடமேற்கு)

சகல கருமத்திற்கும் - ஈசான்யம்

சுவரொட்டி - வழி மறித்தான் போன்ற பெயர்கள் மூலிகைகளின் குணத்திலிருந்து பெறப்பட்ட பரிபாஷைப் பெயர்களாகும். பெரும்பாலும் அனுபவசாலிகளாலேயே புரிந்து கொள்ளப்படும். வைத்தியம். மாந்திரீகம் போன்றவற்றைத் தக்க குருவின் மூலமாகவே அறிந்து கொள்ள வேண்டும் என்று கூறப்படுவதன் காரணம் இதுவே.

முற்றும்

தாமரை
நூலகம்